விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இலவயனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-2548)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 04 வெள்ளிக்கிழமை (20.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 244

## ஒரு வாரத்துக்காவது நாட்டை முடக்குங்கள்

### மல்வத்து மற்றும் அஸ்கிரிய தேரர்கள் ராஜபக்ஷ அரசுக்கு அவசர கடிதம்





(கொழும்பு) இலங்கையில் கொரோனா தொற்றுப் பரவல் தீவிரமடைந்து வருவதால் நாட்டை ஒரு வார காலத்துக்காவது முடக்க நடவடிக்கை எடுக்குமாறு மல்வத்து மற்றும் அஸ்கிரிய பௌத்த பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் அரசை வலியுறுத்தியுள்ளனர்.

(03ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று வாரங்களுக்காவது நாட்டை முடக்குங்கள்

அரசின் பங்காளிக் கட்சிகள் ஜனாதிபதிக்கு அவசர கடிதம்

7 ஆம் பக்கம் பார்க்க


## கொரோனாத் தொற்றால் யாழில் ஐவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்) கொரோனாத் தொற்றால் யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை மேலும் 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை 19

# நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி இன்று விசேட உரை

### முடக்கம் குறித்து அறிவிக்கப்படலாம்



(கொழும்பு)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்றைய தினம் நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன்போது நாட்டை முடக்குவது தொடர்பில் ஜனாதிபதியால் அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டில் கொரோனா பரவல் அதிகரித்து வருகின்ற நிலையில் நாட்டை முழுமையாக முடக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவதற்காக சுகாதார தரப்பினரின் ஆலோசனைகள், பரிந்துரைகளுக்கு அமைய நாட்டை ஒரு வாரமாவது 19

## பாண் விலை 5 ரூபாயால் அதிகரிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிக்கவுள்ளதாக, அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 19

## வரணியில் இளம் யுவதி சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

தென்மராட்சி - வரணி பகுதியைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

தூக்கில் தொங்கிய யுவதியை உறவினர் 19

## தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் அரசுடன் இணைந்து செயற்படத் தயார்

### எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ தெரிவிப்பு



(கொழும்பு)

"அரசியல் பிரச்சினைகளைத் தவிர்த்து, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமைக்கு தீர்வு காண்பதற்கு அரசுடன் இணைந்து பணியாற்ற எதிர்க்கட்சி தயாராக இருக்கின்றது."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் 19

## அபாயக் கட்டத்தில் இலங்கை
## ஒரே நாளில் 186 பேர் பலி 3,806 பேருக்கு தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கொரோனாத் தொற்றினால் ஒரே நாளில் 186 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று இரவு அறிவித்துள்ளது.

இதன் அடிப்படையில் இலங்கையில் இதுவரையில் அதிக மரணங்கள் நிகழ்ந்த நாளாக நேற்று முன் 19

### அதிகளவான தொற்றாளர்கள்
## கிளிநொச்சியில் வர்த்தக நிலையங்களை மூட தீர்மானம்

(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கணக்கானவர்களுக்கு கொரோனாப் பரவல் ஏற்பட்டுள்ள நிலையில் அவற்றினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கிளிநொச்சி வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வர்த்தக சங்கம் அறிவித்துள்ளது.

குறித்த நடவடிக்கை இன்று வெள் 19

### கொரோனாவால்
## வவுனியாவில் பெண் மரணம்

(வவுனியா)

வவுனியா பம்பைமடு தனிமைப்படுத்தல் மையத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் கோவிட் தொற்று நோயால் நேற்று மரணமடைந்துள்ளார். 19

### யாழில் 68 பேர் உட்பட
## வடக்கில் 128 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 68 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 128 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை ஆய்வு 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காலாவதியான சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பிப்பதற்கு மேலும் 6 மாத கால அவகாசம்

(கொழும்பு)

இலங்கையில் சாரதிகளின் காலாவதியான சாரதி அனுமதிப் பத்திரங்களை புதுப்பிப்பதற்கு மேலும் 6 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் சுமித் அழகக்கோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மோட்டார் வாகன திணைக்களத்தின் பிரதான காரியாலயங்களும், பிரதேச அலுவலகங்களும் மூடப்பட்டுள்ளன.

இதன்காரணமாக கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதி வரையான கால இடைவெளியில் சாரதி அனுமதிப் பத்திரங்கள் நிறைவடைந்த காலத்தில் இருந்து மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், புதிதாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளவுள்ளவர்களுக்கான திகதியினை முற்பதிவு செய்யும் நடைமுறையும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள ஆணையாளர் சுமித் அழகக்கோன் தெரிவித்துள்ளார். (ம)


## தும்பளை நெல்லண்டை அம்மன் தர்ம பரிபாலன சபை

நிர்வாக சபை [2021/2022]

1. தலைவர் : திரு.ந.சற்குணராசா
2. செயலாளர் : திரு.வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா
3. பொருளாளர் : திரு.து.ஸ்ரீகாந்
4. உப தலைவர் : திரு.இ.சிவபுண்ணியம் (நெல்லண்டை அம்மன் கோவில்)
5. உப தலைவர் : திரு.சி.தங்கவடிவேல் (முத்துமாரி அம்மன் கோவில்)
6. உப தலைவர் : திரு.ஜெ.ஜெயகரன் (முருகன் கோவில்)
7. உப செயலாளர் : திரு.சி.சிவகுமார்
8. உப பொருளாளர் : திரு.பா.கோபிதாஸ்
9. முகாமையாளர் : திரு.ஜெ.ஜெயராம் (நெல்லண்டை அம்மன் கோவில் )
10. முகாமையாளர் : திரு.சி.சிவதாஸ் (முத்துமாரி அம்மன் கோவில்)
11. முகாமையாளர் : சீ.இரத்தினவேல் (01.08.2021 தொடக்கம் முருகன் கோவில்)
12. நிர்வாக சபை உறுப்பினர்: திரு.மா.திருநீலன்
13. நிர்வாக சபை உறுப்பினர் : திரு.ச.ரஜீந்திரன்
14. நிர்வாக சபை உறுப்பினர் : திரு.த.சுஜன்
15. நிர்வாக சபை உறுப்பினர் : திரு.வை.சண்முகவடிவேல்

கணக்காய்வாளர் : திரு.பொ.அரவிந்தன்
சட்ட ஆலோசகர் : திரு.பா.சுப்பிரமணியம்

**25.07.2021 ஞாயிறு அன்று தும்பளை நெல்லண்டை அம்மன் திருமண மண்டபத்தில் நடைபெற்ற 76ஆவது வருட பொதுச் சபைக் கூட்ட பெறுபேறுகளின்படி அறியத் தருகின்றோம்.**

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா
செயலாளர்
தும்பளை நெல்லண்டை அம்மன் தர்ம பரிபாலன சபை

(C-2571)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**



**யாழ். சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

இன்று (20.08.2021) வெள்ளி
மாலை 5.00 மணிக்கு
நரம்பியல் வைத்திய நிபுணர்
கொழும்பில் இருந்து வருகை
தருகின்றார்.

இல. 08, இராமையாச் செட்டியார் லேன்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**077 873 0129**

(7694)


# யாழில் வீட்டிலிருந்த நபர் மர்மமான முறையில் மரணம்

யாழில் வீட்டில் இருந்த இளைஞன் ஒருவர் மர்மமான முறையில் நேற்று உயிரிழந்துள்ளார். அவரது சடலம் பிசிஆர் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கலட்டி கே. கே. எஸ் வீதியில் உள்ள அவரது குடும்பத்தினர் காலை 10 மணியளவில் இவரை வீட்டில் தனியாக தொழில் நிமிர்த்தம் (நகைத் தொழில் ) விட்டுவிட்டு உறவினர் வீட்டிற்கு சென்றுள்ளனர். மீண்டும் பிற்பகல் 2.00 மணியளவில் அவருக்காக உணவுடன் வந்து பார்த்தபோது உயிரற்ற நிலையில் காணப்பட்டுள்ளார்.

அதே இடத்தைச் சேர்ந்த மகேஸ்வரன் மதனரூபன் (வயது - 36) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

# மோ. சைக்கிள் விபத்து முதியவர் உயிரிழப்பு

## கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் இடம் பெற்றுள்ளது.


கிளிநொச்சி நகரில் பாதசாரிக் கடவையை கடந்துகொண்டிருந்த வயோதிபர் மீது மோட்டார் சைக்கிள் மோதியதில் முதியவர் படுகாயமடைந்துள்ளார்.

படுகாயமடைந்த முதியவர் உடனடியாக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுமதித்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த வேளையில் நேற்றைய தினம் அதிகாலை 3.40 மணிக்கு சிகிச்சைகள் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதில் மலையாளபுரம் கிளிநொச்சியைச் சோந்த பொன்னையா அடைக்கப்பன் (வயது 71) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்து தொடர்பாக மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம)

# மரண அறிவித்தல்



## கதிரித்தம்பி துரைராசா

அரசொல்லை அளவெட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் பெரிய விளான் செம்பாடு மற்றும் கலைவாணி மில் லேன், கொக்குவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி துரைராசா நேற்று (19.08.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இளையதம்பி - இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கனகம்மாவின் அன்புக் கணவரும் சிவநந்தினி (சுவிஸ்), சிவானந்தன் (ஜேர்மனி), சிவரஞ்சனி (சுவிஸ்), சிவலோஜினி மற்றும் காலஞ்சென்ற சுலோஜனா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கெங்காதரன் (சுவிஸ்), ஜீவா (ஜேர்மனி), கமலநாதன் (அகிலன்- சுவிஸ்), அருட்குமரன் (உரிமையாளர் - கலைவாணி மில், கொக்குவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான முருகையா, சின்னராசா மற்றும் சிவக்கொழுந்து, காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் வேலும்மயிலும் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் தம்பையா, சுந்தரலிங்கம் மற்றும் காலஞ்சென்ற பத்மராணி ஆகியோரின் அருமைச் சகோதரரும் சம்பூரணம், சிவமணி மற்றும் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை, அற்புதலிங்கம், பரராஜசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் அபிநயா, அபிராமி, பிரசான், ஆரங்கன், தனுசன், கபினா, அபினா, சாருஜன், அஸ்வின், சகான், பவித்திரா (மாணவி-கிழக்குப் பல்கலைக்கழகம்), சங்கீத், சம்சனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.08.2021) வெள்ளிக் கிழமை காலை 8.00 மணியளவில் கொக்குவில் கிழக்கு கலைவாணி மில் லேனிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று காலை 10.00 மணியளவில் பூதவுடல் அளவெட்டி கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-2568)

கலைவாணி மில் லேன்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வாரத்திற்காவது நாட்டை முடக்குங்கள்

## மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை

(கொழும்பு)

**நாட்டை குறைந்தது ஒரு வாரத்துக்கு முழுமையாக முடக்குமாறு மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகா நாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளனர்.**

பௌத்தபீடங்களின்ஆலோசனையை மதித்து ஆட்சியை முன்னெடுக்கும் ஜனாதிபதி இந்தக் கோரிக்கையை கவனத்தில் எடுப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

கொரோனா தொற்று பரவலானது நாடு முழுவதும் ஒரு பேரழிவு சூழ்நிலையை கொண்டு வந்துள்ளதாக ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே, ஒரு வாரத்திற்கு முடக்கம் இருக்கும் போது மக்களைப் பாதுகாக்கவும் அவர்களுக்கு நிவாரணம் வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும் சுகாதார நிபுணர்களின் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளை பெற்றுக் கொள்ளுமாறும் மகாநாயக்க தேரர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி-5)

## டெல்டா திரிபுகள் குறித்த அறிக்கை இன்று வெளியீடு

(கொழும்பு)

நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸின் டெல்டா தொற்றின் புதிய திரிபுகள் தொடர்பாக ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பரிசோதனை அறிக்கை இன்று வெளியிடப்படும். குறித்த பரிசோதனைகளை நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள தாக பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல் துறை பிரிவின் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார். நாட்டில் டெல்டா கொரோனா வைரஸ் திரிபின் 3 பிறழ்வுகள் பரவலடைந்து வருவதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதன்படி, **S.A 222 V, S.A 701 S** மற்றும் **S.A 1078 S** ஆகிய டெல்டா வைரஸ் திரிபின் 3 பிறழ்வுகள் கண்டறியப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டிருந் தார்.

இதனையடுத்து, இந்த பிறழ்வுகள் தொடர்பான பரிசோதனைகளை ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம் ஆரம்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்கள சேவைகள் இடை நிறுத்தம்

## மீள் சேவைகள் நடைமுறை தொடர்பான அரசாங்க அதிபரின் அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

நாட்டில் பரவலாக ஏற் பட்டுள்ள கொவிட்-19 தொற்று காரணமாக, யாழ்ப்பாணம் மோட்டார் வாகனபோக்கு வரத்து கடமைகள் யாவும் இரு நாட்கள் (நேற்றும் இன்றும்) இடைநிறுத்தப்பட்டுள்ளன என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார். அவர் நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2021.08.19, 202108.20 இத்திகதிகளில் நடை பெறவிருந்த மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திர எழுத்துப் பரீட்சைகள் யாவும் கீழ் குறிப்பிடப்படும் திகதிகளில் அறிவிக்கப்படுகின்ற நேரத்திற்கு நடைபெறும்.

2021.08.19 வியாழக்கிழமை பரீட்சைகள் 2021.08.21 ஆம் திகதி சனிக்கிழமையும் 2021.08..20 வெள்ளிக்கிழமை பரீட்சைகள் 2021.08.23 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறும்.

2021.08.19 வியாழக்கிழமை நடைபெறவிருந்த மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திர செயன்முறைப் பரீட்சைகள் யாவும் 2021.08.23ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

அத்துடன் மோட்டார் வாகன சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான ஏனைய நடவடிக்கைகள் 2021.08.23-2021.08.27 வரை வழங்கப்பட்ட, வழங்கப்படவுள்ள நுழைவுச்சீட்டிற்கு அமைவாக நாளாந்தம் 50 நுழைவுச்சீட்டுக்கள் என்ற அடிப்படையில் நடைபெறும். மோட்டார் வாகன உடைமை மாற்றம் தொடர்பான கடமைகள் யாவும் உரியவர்கள் முற்பதிவுசெய்த ஒழுங்கில் தொலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டமைக்கமைவாக நடைபெறும்.

சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான முடிவுத்திகதி தொடர்பாக, 2221/57ஆம் இலக்க 2021.04.01ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேஷ வர்த்தமானிப் பத்திரிகையின் பிரகாரம் 2021 ஏப்ரல் முதலாம் திகதி முதல் செப்டெம்பர் 30 வரையில் காலம் முடிவடைகின்ற அனுமதிப்பத்திரங்களிற்கு காலாவதித் திகதியில் இருந்து 06 மாதங்கள் நீடிக்கப்பட்டுள்ளதாக அறியத்தரப்பட்டுள்ளது. இதற்கமைவாக எம்மால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலதிக மாற்றங்கள் ஏதாவது ஏற்படின் பின்னர் அறியத்தரப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## இரண்டு வாரங்கள் முடக்குவதால் பொருளாதாரம் சரிந்து விடாது

### ஐக்கிய மக்கள் சக்தி



(கொழும்பு)

இரண்டு வாரங்கள் நாட்டை முடக்குவதால் பொருளாதாரம் முழுவதும் சரிவடைந்து விடப் போவதில்லை. உலக நாடுகள் எவ்வாறு செயற்படுகின்றன என்பதை அவதானித்து அதிலிருந்து அனுபவங்களைப் பெற்று மக்களை பாதுகாக்குமாறு ஜனாதிபதியை வலியுறுத்துகின்றோம் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

டொலர் பெறுமதி நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது.

சுதந்திரத்திற்கு பின்னர் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்துள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

குறுகிய காலத்தில் நாம் பாரிய சவாலை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. யதார்த்தத்தை புரிந்து கொள்ளாமல் நிலைமையை மறைப்பதற்காக வேறு செயற்பாடுகளை முன்னெடுப்பதால் மக்களே பாதிக்கப்படுவர்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாட்டின் பொருளாதாரம் ஒரே தடவையில் திடீரென வீழ்ச்சியடையாது. தொடர்ந்தும் அளவுக்கு அதிகமாக நாணயத்தாள்களை அச்சிடுவதால் பணவீக்கம் உயர்வடையும். பணவீக்கம் உயர்வடைந்தால் பொருட்களின் விலையும் அதிகரிக்கும். இதனால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவர்.

எனவே மாற்று வழி குறித்து அரசாங்கம் சிந்திக்க வேண்டும். மாற்று வழிகள் இருக்கின்றன. பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்களுக்கு 5000 ரூபாய் வழங்க வேண்டும் என்ற அச்சத்திலேயே நாட்டை முடக்குவதற்கு அரசாங்கம் பின்வாங்குகிறது.

பொருளாதார சந்தையை அரசியல்வாதிகளால் முகாமைத்துவம் செய்ய முடியாது. எனவே சர்வதேச நாணய நிதியத்தை நாடப் போவதில்லை என்று பிடிவாதமாகவுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொருளாதார நிபுணர்களிடம் இது தொடர்பில் ஆலோசனை பெற வேண்டும். யதார்த்தத்தை புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும் என ஹர்ஷ தெரிவித்தார். (நி-5)

## வைத்தியசாலைகளுக்கு உதவிக்கரம் நீட்டுங்கள்

### வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களிடம் வேண்டுகோள்



(கொழும்பு)

இலங்கையிலுள்ள வைத்தியசாலைகளுக்கு உதவிகளை வழங்குமாறு வெளிநாட்டுவாழ் இலங்கையர்களிடம் இராஜாங்க அமைச்சரும் விசேட வைத்திய நிபுணருமான சுதர்ஷனி பெர்னாண்டோ புள்ளே வேண்டுகோள் விடுத்தார்.

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்னிலுள்ள வானொலி ஒன்றுடனான உரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன் போது அவர் மேலும் கூறுகையில், "நாட்டின் வைத்தியசாலைகளில் வைத்திய உபகரணங்கள் பற்றாக்குறை நிலவுவதால் அவற்றை வழங்குமாறு கோரிக்கை விடுக்கிறேன்.

மேலும், ஒட்சிசன் தட்டுப்பாடும் நிலவுகிறது. இவற்றை பெற்றுக் கொடுக்குமாறு வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்" என அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-5)

## தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டது

(கொழும்பு)

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைய்யாளர் நாயகம் சமன் ஸ்ரீரத்நாயக்கவுக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது.

அத்துடன், அவரின் குடும்ப உறுப்பினர்கள் சிலரும் வைரஸ் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவிலுள்ள குறித்த ஆணையாளரின் அலுவலகம் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஓபன் டென்னிஸிலிருந்து விலகுவதாக டொமினிக் அறிவிப்பு



நடப்பு சம்பியனும் உலக தரவரிசையில் 6ஆவது இடத்தில் இருப்பவருமான ஆஸ்திரியாவின் டொமினிக் திம் அமெரிக்க ஓபன் டென்னிசில் இருந்து விலகுவதாக அறிவித்தார்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி நியூயோர்க்கில் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் செப்டெம்பர் 12ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்த போட்டியில் இருந்து நடப்பு சம்பியனும் உலக தரவரிசையில் 6 ஆவது இடத்தில் இருப் பவருமான ஆஸ்திரியாவின் டொமினிக் திம் விலகுவதாக அறிவித்தார்.

அத்துடன் இந்த சீசனின் எஞ்சிய போட்டிகளிலும் விளையாடப் போவதில்லை என்று அவர் தெரிவித்துள்ளார். இது குறித்து 27 வயதான டொமினிக் திம் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், 'அமெரிக்க ஓபன் மற்றும் இந்த ஆண்டுக்கான எஞ்சிய சீசனையும் நான் தவறவிடுகிறேன். அமெரிக்க ஓபன் பட்டத்தை தக்க வைக்க முடியாமல் போனது மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. கடந்த ஜூன் மாதம் எனது மணிக்கட்டில் ஏற்பட்ட காயம் இன்னும் குணமடையவில்லை என தெரிவித்தார். (4-6)






# குழந்தையின் உயிர்காக்க ஒலிம்பிக் பதக்கத்தை அர்ப்பணித்த வீராங்கனை

டோக்கியோ ஒலிம்பிக் போட்டியில் ஈட்டி எறிதலில் வெள்ளிப் பதக்கம் வென்ற மரியா ஆண்ட்ரேஜ்சிக், தனது பதக்கத்தை ஏலத்துக்கு விட்டு சொந்த நாடான போலந்தில் உள்ள ஒரு குழந்தையின் உயிர் காக்கும் இருதய அறுவை சிகிச்சைக்கு உதவி செய்துள்ளார்.

தனது முதல் ஒலிம்பிக் பதக்கத்தை 25 வயதான மரியா ஆண்ட்ரேஜ்சிக் 125,000 அமெரிக்க டொலருக்கு ஏலத்தில் விட்டுள்ளார்.

ஆண்ட்ரெஜ்சிக் தனது முகநூல் பக்கத்தில் 8 மாத வயது மினோசெக் மாயிசா என்ற குழந்தைக்கு நிதி திரட்டியதைக் கண் டறிந்தார். குழந்தைக்கு கடுமை யான இதய குறைபாடு மற்றும் அறுவை சிகிச்சை தேவைப்பட்டது மேலும் அவருக்கான பணத்தை திரட்ட உதவுவதற்காகவே அவர் ஒலிம்பிக் பதக்கத்தை ஏலத்தில் விற்றுள்ளார். அவர் 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் வெறும் 2 சென்றிமீற்றர் தூரத்தில் ஒரு பதக்கத்தை வெல்வதற்கான வாய்ப்பினை நழுவவிட்டார். (4-6)

# பெர்முலா 1 கொரோனாவால் ரத்து



இந்த ஆண்டுக்கான 'பெர்முலா1' கார் பந்தயம் 22 சுற்றுகளாக நடத்தப்படுகிறது. இதுவரை நடந்துள்ள 11 சுற்றுகள் முடிவில் நடப்பு சம்பியனான இங்கிலாந்து வீரர் லீவிஸ் ஹாமில்டன் (மெர்சிடஸ் அணி) 195 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார்.

இந்த போட்டி தொடரின் 17 ஆவது சுற்றான ஜப்பான் கிராண்ட் பிரி போட்டி ஒக்டோபர் 10 ஆம் திகதி அங்குள்ள சுசுகா ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது. கொரோனா பரவல் அதிகரிப்பு காரணமாக இந்த போட்டியை ரத்து செய்வதாக ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

இதனால் இந்த போட்டி வேறு இடத்தில் நடைபெறுவது குறித்து ஆலோசித்து பின்னர் முடிவு செய்யப்படும் என்று 'பெர்முலா1' போட்டி அமைப்பு குழு தெரிவித் துள்ளது.

கடந்த ஆண்டும் கொரோனா பாதிப்பு காரணமாக ஜப்பான் கிராண்ட்பிரி ரத்து செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (4-6)

# நடைபெறவுள்ள ஐ.பில்.எல் போட்டியில் ரசிகர்களுக்கு அனுமதி கிடைக்கும்

## இந்திய கிரிக்கெட் வாரியம் நம்பிக்கை

இந்தியாவில் ஐ.பி.எல். போட்டி நடந்தபோது கொரோனா பரவல் காரணமாக ரசிகர்கள் அனுமதிக்கப்படவில்லை. ரசிகர்கள் இன்றி போட்டிகள் நடந்தன. 14 ஆவது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டித் தொடர் கடந்த ஏப்ரல் 9 ஆம் திகதி இந்தியாவில் தொட ங்கியது. போட்டிகள் நடந்து கொண்டிருக்கும் போது சில வீரர்களுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டது.

இதையடுத்து ஐ.பி.எல். போட்டி தள்ளி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. அது வரை 29 லீக் ஆட்டங்கள் நடந்து முடிந்திருந்தன.

அதன்பின் ஐ.பி.எல். போட்டியின் எஞ்சிய ஆட்டங்கள் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெறும் என்று கிரிக்கெட் வாரியம் அறிவித்தது.

வருகிற செப்டெம்பர் 19 முதல் ஒக்டோபர் 15 வரை எஞ்சிய ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

ஐக்கிய அரபு எமிரேட்சில் நடக்கும் ஐ.பி.எல். போட்டியில் ரசிகர்களை அனுமதிப்பது தொடர்பாக எமிரேட்ஸ் கிரிக்கெட் வாரிய பொதுச்செயலாளர் உஸ்மானி கூறுகையில், இந்திய கிரிக்கெட் வாரியத்திடமும் ஐக்கிய அரபு எமிரேட்சிடமும் அது பற்றி பேசுவோம் என்றார்.

இதுகுறித்து இந்திய கிரிக்கெட் வாரிய பொருளாளர் அருண் துமால் கூறியதாவது, இந்திய கிரிக்கெட் வாரியம் ரசி கர்கள் கூட்டத்தை விரும்புகிறது.

ஆனால் வீரர்கள் மற்றும் மக்களின் பாதுகாப்புதான் முக்கியம். அங்கு அனைவருக்கும் தடுப்பூசி போடப்பட்டதால், இந்த முறை ரசிகர்களுக்கு ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசு அனுமதி அளிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம். அது அந்நாட்டு அரசின் முடிவாக இருக்கும்.



அடுத்த ஆண்டு நடைபெறும் ஐ.பி.எல். போட்டியில் மேலும் இரண்டு புதிய அணிகள் சேர்க்கப்பட வாய்ப்பு உள்ளது என்றார்.

இந்த நிலையில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அரசு ஐ.பி.எல். போட்டியில் 60 சதவீத ரசிகர்களுக்கு அனுமதி அளிக்க உள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது. (4-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் மரணித்து விட்டதா?

# வலிப்பால் அவதியுறும் நபர் உதவ அச்சப்படும் மக்கள்



(கொழும்பு)

நாட்டில் பி.சி.ஆர். பரிசோதனை செய்யும் நிலைய மொன்றில் மழையில் நனைந்த படி நபரொருவர் வலிப்பினால் பாதிக்கப்பட்டு நிலத்தில் விழுந்து அவதியுறும் காணொளியொன்று தற்போது சமூக வலைத்தளத்தில் வைரலாகியுள்ளது.

குறித்த நபர் கீழே விழுந்து வலிப்பினால் அவதிப்படும் நிலையில் அதனை காணொளியாக பதிவு செய்த போதும் கூட பாதிக்கப்பட்ட நபரை அங்கிருந்து பாதுகாப்பான இடத்திற்கு கொண்டு செல்வ தற்கோ, குறைந்தபட்சம் அவர் அருகில் செல்வதற்கோ கூட மக்கள் தயங்குகின்ற மையும், மருத்துவர் அல்லது தாதியொருவரை வரவழைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதும் அந்த காணொளியில் பதிவா கியுள்ளது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று அச்சம் காரணமாக பொது இடங்க ளில் இவ்வாறான நிலைக்கு உள்ளாகும் நபர்களுக்கு உதவி செய்வதற்கு அச்சப்ப டும் நிலை தொடர்ச்சியாக பதிவாகி வருகிறது. கொவிட் தொற்று நிலை நாட்டில் நிலவுகின்ற போதும் ஒரு மனித உயிர் ஆபத்தில் இருக்கும் சந்தர்ப்பத்தில் ஓடிசென்று உதவும்மனிதம் நாட்டில் மரித்து வருகிறதா என சமூக ஊடகங்களில் கேள்வியெழுப்பப்பட்டது. (நி-5)

# வர்த்தக நிலையங்களை மூடுமாறு கொழும்பு மேயர் அழைப்பு



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கொழும்பு நகரத்தில் உள்ள வர்த்தக நிலையங்களை மூடுமாறு கொழும்பு மேயர் ரோஸி சேனநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

அதேநேரம் நேற்று முன்தினம் நகரத்தில் உள்ள அனைத்து கடைகளையும் மூடுவதற்கான வர்த்தக சங்கங்களின் நடவடிக்கையை வரவேற்ற ரோசி சேனாநாயக்க,

"இலாபத் தைப் பற்றி சிந்திக்காமல் தொற்றுநோயைக் கட்டுப் படுத்துவதில் அவர்களின் பங்களிப்பு பாராட்டத்தக்கது மற்றும் வரவேற்கத்தக்க நடவடிக்கை" என்றும் கூறினார். (நி-5)

# ஊக்குவிப்பு கொடுப்பனவுக்கான பதிவுகளை மேற்கொள்ளவும்

## காரைநகர் கமநல சேவைகள் நிலையம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கமநல சேவைகள் அதிகார பிரிவிற்குட்பட்ட நெற்செய்கை மேற்கொள்ளும் வயல்களின் பொருட்டு, இயற்கை திண்ம தாவர போசாக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவிற்கான பதிவுகள் கமக்கார அமைப்புக்களில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் காரைநகர் பிரிவுக்குட்பட்ட அனைத்து விவசாயிகளும் தத்தமது கமக்கார அமைப்புக்களிடம் கமக்கார அங்கத்துவ அட்டையுடனும் 2021 ஆம் ஆண்டுக்கான ஏக்கர் வரிப் பற்றுச்சீட்டு ஊக்குவிப்பு கொடுப்பனவு பணத்தினை வைப்பு செய்ய வேண்டிய வங்கிப் புத்தகத்தின் கணக்கு இலக்கம் தெளிவாக தெரியக்கூடிய வங்கிப்புத்தகத்தின் பிரதி, தேசிய அடையாள அட்டை பிரதி மற்றும் வயற்காணி பதிவேட்டு இலக்கங்களுடன் சென்று 26.08.2021 இற்கு முன்பதாக பதிவுகளினை மேற்கொள்ளுமாறு காரைநகர் கமநல அபி விருத்தி உத்தியோகத்தர் என்.மயூரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விபரங்களினை கமநல சேவைகள் நிலையத்தில் அல்லது உரிய கமக்கார அமைப்புக்களிடம் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் பதிவுகளை மேற்கொள்ள வருவோர் சுகாதரா நடைமுறைகளை பின்பற்றி வருமாறும் அறிவித்துள்ளார். (4)


# 28ஸ்ரீ 0882 இலக்க லொறி விற்பனை

## ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்- ஒட்டுசுட்டான்

ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் இடப்பெயர்வின் போது கைவிடப்பட்டு மீளவும் கொண்டுவரப்பட்ட 28ஸ்ரீ0882 இலக்கமுடைய பதிவுச் சான்றிதழ் உள்ள லொறி ஒன்று விற்பனை செய்யப்படவுள்ளதால் இதனை எதிர்வரும் 31.08.2021ம் திகதிக்கு முன்னர் வித்தியாபுரம் ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள சங்க தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் காலை 8.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை பார்வையிட்டு விலையை மதிப்பீடு செய்து கோரிக்கை கடிதத்தினை எதிர்வரும் 15.09.2021ம் திகதிக்கு முன் தலைவர் ஒட்டுசுட்டான் முத்துஐயன்கட்டு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் ஒட்டுசுட்டான் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கூட்டுறவுச் சேவையிலுள்ள,**
**தலைவர்.**

**மேலதிக தகவலுக்கு :- 0779484097**
**0776546011**

(C-2567)


# தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு இன்று தேர்த்திருவிழா



வெய்யவனும் நிலவு பொழியும் நாள் வந்தது
செய்யவன் தேர் நகரும் திருநாள் வந்தது
மெய்யடியார் மனவெளியில் தேர் நகரட்டும்
வையகத்தை ஆட்டிவைக்கும் நோயகலட்டும்

ஐயன்மீது அளப்பரிய வாஞ்சை கொண்டவள்
அவன் வளர்க்கும் சிறுமியரை வார்த்தெடுப்பவள்
பொய்களைந்து மெய் வளர்க்கும் உறுதி பூண்டவள்
கையளவு உள்ளம் தனில் குடியிருப்பவள்

உய்ய வழிகாட்டும் தேவி உள்ளிருக்கின்றாள்
உய்திபெறும் தெல்லி நகர் தனில் உறைகின்றாள்
செய்திகளால் துடிக்கும் எம்மைக் காத்து நிற்கின்றாள்
சேமமுற வாழ்த்தி அன்னை உளம் நிறைகின்றாள்

**திருமதி பாகீரதி கணேசதுரை**


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

**பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம்**

1. **கலைமாணி**
2. **வணிகமாணி**
3. **நடனமாணி**
4. **இசைமாணி**
5. **வியாபாரமுகாமைத்துவமாணி**

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் சித்தியடைந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளிவாரி மாணவர்களுக்கு பட்டச் சான்றிதழ்களை வழங்கும் முகமாக பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவம் ஒன்றை எதிர்வரும் **18.09.2021 (சனிக்கிழமை) காலை 9.00** மணி தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பட்டக் கற்கைநெறிகளில் **02.09.2017 இற்கு பின்பும் 23.01.2021 திகதிக்கு முன்பும்** சித்தியடைந்த மாணவர்களுக்கே மேற்படி பட்டச் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பட்டங்கள் வழங்கப்படவிருப்பதால், தகுதி உடையவர்கள் 03.09.2021 **(வெள்ளிக்கிழமை)** இற்கு முன்னதாக பூர்த்தி செய்யப்பட்ட வேண்டுகோள் படிவத்தினை **(Supplication Form)** திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

வேண்டுகோள் படிவங்களை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நேரடியாகவோ அல்லது எமது இணையத்தள முகவரியிலும் **(www.codl.jfn.ac.lk)** பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

**பதிவாளர்.**

(C-2566)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டம்

# யாழ். மாவட்டத்திலும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

**தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று கோவிட்-19 தடுப்பூசி பெறமுடியாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வீட்டுக்குச் சென்று வழங்கும் வேலைத்திட்டம் யாழ். மாவட்டத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் கொடிதுவக்கு தெரிவித்தார்.**



நேற்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இராணுவத்தினரின் நடமாடும் கொவிட்-19 தடுப்பூசி வழங்கும் திட்டத்தை ஆரம்பித்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது. இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவின் வழிகாட்டலின் கீழ் நாடு முழுவதும்முன்னெடுக்கப்பட்டுவரும் நடமாடும் தடுப்பூசி வழங்கும் திட்டமானது யாழ்ப்பாணத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் சுகாதாரப் பிரிவினருடன் இணைந்து இந்த வேலைத்திட்டம் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்படுகின்றது.

இராணுவத்தின் மருத்துவப் பிரிவினர் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். தற்போது மக்கள் மத்தியில் கொவிட்-19 தடுப்பூசியினை பெற விருப்பம் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. அவ்வாறான ஒரு நிலைமை வேண்டாம். நாடு முழுவதும் இந்தத் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகின்றது. எனவே எதிர்வரும் காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் தடுப்பூசியினை கட்டாயமாகப் பெற வேண்டும்.

கடந்த காலத்தில் தடுப்பூசி தொடர்பில் பயத்துடன் இருந்திருக்கலாம் ஆனால்இனிஅந்தபயத்தை தவிர்த்து தடுப்பூசியினை பெற்றுக் கொள்ளுங்கள் எனத் தெரிவித்தார். (4-7-18-33-104)

## தென்மராட்சியில்

# முதல் டோஸ் பெற்றுக்கொண்ட பலர் இரண்டாவது டோஸ் பெறவில்லை

## நாளை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த காலங்களில் கொவிட் தடுப்பூசியின் முதல் ஊசியைப் பெற்ற பலர் உரிய காலம் கடந்தும் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் தென்மராட்சிப் பிரதேசத்தில் ஒவ்வாமை உடைய பலர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சிபாரிசுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கொவிட் 19 நோய்த் தொற்றுக்கான முதல் தடுப்பூசியை பெற்றுக் கொண்டனர். அவ்வாறு முதலாம் தடுப்பூசி பெற்றுக்கொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் உரிய காலம் கடந்தும் இரண்டாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை.

முதலாவது தடுப்பூசி செலுத்தி உரிய காலத்தை பூர்த்தி செய்தவர்கள் நாளை சனிக்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தமக்கான இரண்டாவது தடுப்பூசியை காலை 8.30 மணி தொடக்கம் பெற்றுக் கொள்ள முடியும் என வைத்தியசாலை அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தடுப்பூசி பெற வருவோர் உரிய சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் மேலும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (4-7-30)

# நயினை நாகபூஷணி அம்மன்

## ஆலயத்தினுள் பக்தர்களுக்கு அனுமதியில்லை

(யாழ்ப்பாணம்)

கொரோனோ பெருந்தொற்று காரணமாக நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன் ஆலயத்தினுள் மறு அறிவித்தல் வரையில் 'பக்தர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று தாக்கத்தின் தீவிரத் தன்மை காரணமாக மறு அறிவித்தல் வரை ஆலயத்திற்குள் அடியார்கள் எவரும் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்பதைத் தெரிவிப்பதுடன் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தருவதை முற்றாக தவிர்த்து தங்கள் இல்லங்களில் இருந்து அம்பாளை வேண்டி வழிபாடு செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (4-7-83)

# 11 பேருக்கு தொற்று

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யால் தனிமைப்படுத்தலில் இருந்தவர்களுக்கு நேற்று அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் வல்வெட்டித்துறை நகர சபை உப தவிசாளர் மற்றும் அவரின் குடும்ப உறுப்பினர்கள் என உடுப்பிட்டி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 11 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (4-7-60)




## நல்லைக் கந்தனை கை தொழ...

அலங்காரக் கந்தனுக்கு மகா உற்சவமாம்
அழகுக்கே அழகு சேர் கந்தனுக்கு
எங்கள் நல்லூரானுக்கு ஆகாமிய பெரு விழா
நாடெங்கும் முடங்கினாலும் அல்லல் ஏற்படினும்

முருகனை வணங்கா நெஞ்சம் உண்டா
வேலுண்டு வினையில்லை கலியுகத்தில்
கண்கண்ட ஆண்டவன் கலியுகவரதன்
அவனை தினம் தினம் எண்ண

வேதனைகள் ஓடிடுமே அல்லல் மாண்டிடுமே
தீவினைகள் ஒளிந்திடுமே வேற்றுமைகள் நீங்கிடுமே
சர்வமும் தீர்ந்திடுமே நன்மைகள் பெருகிடுமே
நல்லை கந்தனை சல்லாபமாக கைதொழ...

எஸ்.யு.சிவம்,
ஏழாலையம்பதி

## வழி ஒன்று காட்டுமப்பா...

அண்டமே சிறு பூச்சியால்
அடங்கியுள்ள வேளை
நல்லூரானுக்கு
நாலடியில் சீரெடுத்து
பாதொடுக்க
மனதில் இடமில்லை
இந்த நிலை மாறி
உம் பாதம் சரணடைய
வழி ஒன்று காட்டுமப்பா

கரிகாலன்
ஊரெழு

## அழகனே வருக!

அழகிய வேலவனே நல்லைக் கந்தனே
ஆறுதல் தருபவனே அலங்காரக் கந்தனே

இருள் போக்கும் ஒளியும் நீயே
ஈசன் மகனே ஈதல் பொருளே

உமாதேவி புத்திரனே உலகம் காப்பவனே
ஊழ்வினை தீர்த்து அடியவரைக் காப்பவனே

எழில்மிகு குமரனாய் என்றும் எழுபவனே
ஏறுமயில் ஏறி உலகம் சுற்றியவனே

ஐயம் தீர்க்கும் அற்புதக் கந்தனே
ஒலியாய் இருந்து இசையாய் மலர்பவனே

ஓம் என்னும் வடிவாய் இருப்பவனே
ஔடதமாய் இருக்கும் கந்தனே போற்றி

அரியாலை கு. பிரதீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்று வாரங்களாவது நாட்டை முடக்குங்கள்

## பங்காளிக் கட்சிகள் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

**குறைந்தது மூன்று வாரங்களுக்கு நாட்டை முடக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் மூலம் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன.**

குறைந்தபட்சம் மூன்று வாரங்களுக்கு நாட்டை முடக்காமல் விட்டால் கொரோனா நோயாளிகளின் எண்ணிக்கையை வைத்தியசாலைகளினால் தாங்க முடியும் அளவிற்கு குறைக்க முடியாது என்று நம்புவதாகவும் அவர்கள் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நமது இடசாரி முன்னணியின் தலைவரும் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார, லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண, ஜாதிக நிதாஸ் பெரமுனவின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ச, பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் அமைச்சர் உதய கம்மன்பில, ஐக்கிய தேசிய மக்கள் கட்சியன் தலைவர் திரான் அலஸ், இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் டாக்டர் ஜி.வீரசிங்க, இலங்கை மக்கள் கட்சியின் தலைவர் அசங்க நவரத்ன மற்றும் கடமைகளுக்கான தேசிய அமைப்பின் தலைவர் தலைவர் கெவிது குமாரங்க மற்றும் தேசிய காங்கிரஸின் தலைவர் ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோர் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர். (நி-5)

# போராட்டத்திற்கு தீர்வு கிடைத்தால் ஆசிரியர்கள் கற்பித்தலில் ஈடுபடுவர்

(கொழும்பு)

அதிபர் ஆசிரியர் சம்பள முரண்பாட்டை தீர்ப்பதற்காக தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நேற்று முன்தினம் அமைச்சரவை உப குழு அதிபர் - ஆசிரியர் ஒன்றிணைந்த தொழிற்சங்க குழுவுடன் பேச்சுவார்த்தை ஒன்றினை நடத்தியது.

சம்பள முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் கையாளும் ஒரு அணுகுமுறையாகவே இவ் அமைச்சரவை உப குழு அமைந்துள்ளது. இந்நிலையில் அமைச்சரவை மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பாக கல்வி அமைச்சர் மாற்றப்பட்டுள்ளமையானது எமது பிரச்சினைக்கு தீர்வு காண்பதை இழுத்தடிக்கும் முயற்சியாகவே தோன்றுகின்றது.

எனினும் நாடு முழுவதும் இடம்பெறுகின்ற அனைவராலும் அறியப்பட்ட எமது போராட்டம் பற்றி புதிய அமைச்சருக்கு மீண்டும் விளக்க வேண்டிய அவசியம் இல்லை.

பாடசாலைகள் மூடப்பட்டுள்ள இக்கால கட்டத்தில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. எனவே அரசாங்கம் இதயசுத்தியுடன் எமது போராட்டத்திற்கான தீர்வினை முன்வைக்க வேண்டும். சரியான தீர்வு பெறப்பட்டால் அடுத்த தினமே ஆசிரியர்களால் கற்பித்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

மேலும் சாதகமான முடிவு பெறப்பட்டு எமது போராட்டம் வெற்றி பெறும் வரை அதிபர்- ஆசிரியர்கள் இப்போராட்டத்திலிருந்து பின்வாங்காது தொடர்ச்சியாக போராட்டத்தை எம்முடன் இணைந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் கேட்டுள்ளது. (நி-5)


கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா:20 ½ செவ் 2 சூரி3 இல்
உயரம்:174cm
தகைமை/தொழில்: தனியார் கம்பனி உதவிப் பொறியியலாளர்
எதிர்பார்ப்பு:தனியார்,அரசவேலை
தொ.இ: B/12007

பிறப்பு:1983 இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 13 ½ செவ்,சூரி12 இல்
உயரம்: 5'3"
தகைமை/ தொழில்அரசசுகாதார உதவியாளர்
எதிர்பார்ப்பு:படித்தபெண்
தொ.இ: B/12009

பிறப்பு:1985 இந்து நட்சத்திரம்:பூரம்
கி.பா:39செவ் 9 சூரி7 இல்
உயரம்:5'7"
தகைமை/ தொழில்: பட்டதாரி, கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்(அரச)
எதிர்பார்ப்பு:அரச,தனியார் வேலை
தொ.இ: B/12011

பிறப்பு:1987 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 37 ½செவ் 12சூரி10இல்
உயரம்: 5'3"
தகைமை/ தொழில்: தொழில்நுட்ப உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/12015

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 22 ½செவ்,சூரி2 இல்
உயரம்:156
தகைமை/தொழில்:. HNDA, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:தகுந்த தனியார்,அரசவேலை
தொ.இ:G/12012

பிறப்பு:1983இந்து நட்சத்திரம்:அச்சுவினி
கி.பா:68செவ் 11 சூரி1 இல்
உயரம்:4'8"
தகைமை/தொழில்:அரச சுருக்கெழுத்தாளர்
எதிர்பார்ப்பு:மணமகள் விவாகரத்தானவர், கொழும்பில் வேலைபார்ப்பவர் விரும்பத்தக்கது.
தொ.இ:G/12013

பிறப்பு:1988 இந்து நட்சத்திரம்: பூரம்
கி.பா:- செவ்3 சூரி9 இல்
உயரம்:5'3"
தகைமை/தொழில்: HNDA, முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: தனியார் , அரசதொழில்
தொ.இ:G/12014

பிறப்பு: 1994இந்து நட்சத்திரம்:சுவாதி
கி.பா:43 ½செவ்,சூரி12 இல்
உயரம்:158cm
தகைமை/தொழில்: Waiting for Pharmacist Intership
எதிர்பார்ப்பு:Engineer, Accoutant
தொ.இ:G/12019

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொ[...]
சேவைக் கட்டணமாக ரூபா 500 அற[...]


எக்ஸ் பிரஸ் பேர்ல் கப்பல் தீ விபத்து

# குற்றவாளிகளுக்கு எதிராக குற்றப் பத்திரிகை தாக்கல்

(கொழும்பு)

எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பலில் தீ விபத்து தொடர்பான விசாரணையை விரைவாக முடிக்க தீர்மானித்துள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம், நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

மேலும் குற்றவாளிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகளை தாக்கல் செய்யவுள்ளதாக அத்திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்த வழக்கு, நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பு மேலதிக நீதவான் லோச்சனி அபேவிக்ரம முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி லக்மினி கிரிஹாகம, நீதிமன்றத்தில் இந்த விடயத்தை வெளிப்படுத்தினார்.

கடல்சுற்றுச்சூழல்பாதுகாப்பு ஆணையகத்தால் நியமிக்கப்பட்ட விசேட குழு, எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பலில் தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து சான்றுகள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் சேதங்களை ஆராய்ந்து வருகின்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும், எக்ஸ்-பிரஸ் பேர்ல் கப்பலில் தீ விபத்து தொடர்பான விசாரணையை உடனடியாக முடிக்க தீர்மானித்துள்ளதாகவும் குற்றவாளிகளுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகைகளை தாக்கல் செய்யவுள்ளதாகவும் சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்தது. (நி-5)

# 35 தொன் ஒட்சிசனுடன் இலங்கை வருகிறது சக்தி




(கொழும்பு)

இந்தியாவில் இருந்து 35 தொன் ஒட்சிசனை ஏற்றிக்கொண்டு சக்தி என்ற கடற்படைக் கப்பல் இலங்கைக்குப் புறப்பட்டது.

இலங்கையில் கொவிட் தொற்று நோயாளர் தொகை அதிகரித்துள்ளதுடன், ஒட்சிசன் தேவையும் உயர்ந்துள்ளதைக் கருத்தில் கொண்டு இரண்டு ஒட்சிசன் கொள்கலன்களை அவசரமாக இந்தியா வழங்கியுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்துவெட்டுவானின் உள்ள அஞ்சல் அலுவலகத்தை இடம்மாற்ற வேண்டாம்

## பிரதேச மக்கள் கோரிக்கை



(பனிக்கன்குளம்)

புத்துவெட்டுவானின் உள்ள அஞ்சல் அலுவலகத்தை ஐயன் கன்குளம் பகுதிக்கு இடம்மாற்ற வேண்டாம் எனவும் அவ்வாறான நடவடிக்கையை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் எனவும் மீறி குறித்த நடவடிக்கையை மேற்கொண்டால் தாம் எதிர்த்து போராடுவோம் எனவும் புத்துவெட்டுவான் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்

இது குறித்து மேலும் தெரியவருகையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவிற்கு உட்பட்ட புத்துவெட்டுவான் கிராமத்திற்கு சொந்தமான அஞ்சல் அலுவலகம் இன்று வரை பாழடைந்த நிலையில் காணப்படுவதாகவும் அதனை புதுப்பித்து தருமாறும் இதனை விடுத்து புத்துவெட்டுவானின் உள்ள அஞ்சல் அலுவலகத்தை ஐயன்கன்குளம் பகுதிக்கு இடம் மாற்ற வேண்டாம் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

புத்துவெட்டுவான் கிராமத்தில் உள்ள உபஅஞ்சல் அலுவலகம் நிலையான கட்டிடத்தில் இயங்க முடியாத நிலையில் பிறிதொரு கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கும் உப அஞ்சல் அலுவலகத்தினை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளார்கள்.

ஏனைய அரச சேவையினை பெற்றுக்கொள்வதற்காக 20 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. வசதிகள் இல்லாத நிலையில் இந்த கிராமத்தில் இருந்து பல குடும்பங்கள் வேறு இடங்களுக்கு சென்றுள்ளார்கள் இந்நிலையில் தபாலகத்தினை மாற்றுவதை நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

12 ஆண்டுகளாக தற்காலிகமாக இயங்கும் தபாலகத்திற்கு அதற்கான காணி இருந்தும் கட்டிடம் இருந்தும் பாழடைந்த நிலையில் இருக்கின்றது இதனை புதுப்பித்து இந்த பகுதியிலேயே தபாலகத்தை இயங்க தபால்மா அதிபரிடம் ஊடகங்கள் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்கள். இருக்கின்ற ஒரேயொரு அரச நிறுவனமான இந்த அரச சேவையினையும் இடம் மாற்றுவதாக இருந்தால் கிராமத்தில் உள்ள மக்களினையும் வேறு இடத்திற்கு மாற்றுமாறும் கோரிக்கை விடுத்துள்ளார்கள். (7-4-6-281)



வவுனியா மாவட்டத்தில் சமுர்த்தி அருணலு வேலைத் திட்டத்தின் கீழ் பறண்நட்டகல் ஓமந்தை கிராம அலுவலகப் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்கு கருத்திட்டத்திற்கான உள்ளீடுகள் நேற்று வழங்கி வைக்கப்பட்டது.

(படம் : சதீஸ்)

# வீடு புகுந்து இளைஞர் குழு அட்டகாசம் பெறுமதியான உடைமைகள் நாசம்




(தர்மபுரம்)

கிளிநொச்சி மலையாளபுரத்தில் நேற்று முன்தினம் இரவு எட்டு முப்பது மணியளவில்வீடு ஒன்றினுள் புகுந்த இளைஞர் குழுவொன்று நடத்திய வெறியாட்டத்தில் பலஇலட்சம் பெறுமதியான வீட்டு உடைமைகள் நாசம் செய்யப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளரின் வீட்டுக்குள் நுழைவாயில் கதவினை உடைத்துக் கொண்டு உள்ளே சென்ற ஐந்துக்கு மேற்பட்ட இளைஞர்கள் வீட்டின் கதவினையும் உடைத்து உள்நுழைந்து நடத்திய தாக்குதலில் குளிர் சாதனப் பெட்டி, தொலைக்காட்சி, இரண்டு மோட்டார் சைக்கிள்கள், தளபாடங்கள், வீட்டின் ஜன்னல்கள் உள்ளிட்ட சொத்துக்களை அடித்து நொருக்கியுள்ளனர்.

அத்தோடு இக் கும்பல் வீட்டிற்குள் நுழைவதனை அவதானித்த வீட்டின் உரிமையாளரான கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொருளாளர் பின் வழியால்தப்பிச் சென்று விட்ட நிலையில் அவரது மகன் மீது தந்தையை கேட்டு தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தொடர்பில் கிளிநொச்சி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (7-4-6-316)

# கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட சினைப்பர் துப்பாக்கி பாகங்கள்



(முறிகண்டி)

கிளிநொச்சி மாவட்டம் அக்கராயன்குளம் 50 வீட்டுத்திட்டம் பகுதியில் சினைப்பர் (தொலை தூர சுடுகலன்) துப்பாக்கிஒன்றின் பாகங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் இணைந்து அங்கு காணப்படுகின்ற பொதுக் கிணறு ஒன்றினை நேற்று முன்தினம் மாலை சீரமைத்துள்ளனர். இதன்போது சினைப்பரின் பாகங்கள் காணப்பட்டன.

சம்பவம் தொடர்பில் அக்கராயன்குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. குறித்த துப்பாக்கி தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர். (7-4-6-100)

# சட்டவிரோத மரக்கடத்தல் முறியடிப்பு



(தர்மபுரம்)

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லவராயன்கட்டுப்பகுதியிலிருந்து சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தல் இடம் பெறுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலை அடுத்து நேற்றைய தினம் யாழ்ப்பாணம் நோக்கி கடத்தப்படவிருந்த முதிரை மரக் குற்றிகள், மரக்கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கப்ரக வாகனமும் அக்கராயன் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டுடன் நீதி மன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (7-4-6-316)

# காலபோக செய்கைக்கான பதிவுகள் விரைவில்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்குள் 2021-2022 ஆம் ஆண்டு காலப்பகுதியில் காலபோக நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கான பதிவுகள் விரைவில் இடம்பெறவிருப்பதாக அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்தார்.

அதனால் விவசாயிகள் பதிவுகளை மேற்கொள்ளத் தேவையான தேசிய அடையாள அட்டைப் பிரதி, வங்கி கணக்குப் புத்தக முன் பக்க பிரதி, சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் 2021 ஆம் ஆண்டு செலுத்திய வரித் துண்டு ஆகியவற்றை தயார்ப்படுத்தி வைக்கும் பட்சத்தில் குறிப்பிட்டதொரு நாளில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். எனவும் தெரிவித்தார்.(4-7-30)

# இணையவழிக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

கொரோனா வைரஸ் பரவலின் சமகால அபாயமும் அதனை வெற்றி கொள்வதற்கான மக்களின் பங்களிப்பும் என்ற தலைப்பிலான இணையவழிக் கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை பி.ப. 8 மணியளவில் சூம் செயலியூடாக (Zoom ID : 65370179593, Pass code : 846407) இடம் பெறவுள்ளது.

இதில் பிரதான உரையைச் சமுதாய மருத்துவ நிபுணர் வைத்தியர் முரளி வல்லிபுரநாதன் ஆற்றவுள்ளதுடன், அக் கருத்துரையினைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம் பெறவுள்ளது. இவ் இணையவழிக் கலந்துரையாடலில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள்ளனர். (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

20.08.2021
ஆவணி 04, வெள்ளிக்கிழமை
திரயோதசி முன்னிரவு 8.45 மணிவரை
உத்தராடம் முன்னிரவு 10.04 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சந்திராஷ்டமம்: மிருக சீரிடம், திருவாதிரை,
வரலட்சுமி விரதம், பிரதோச விரதம். வளவன்


மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.


ரிஷபம்

இனத்தார் பகை மாறும், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் பெருகும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் முன்னெற்றம் காண்பீர்கள்.


மிதுனம்

ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், திடீர் செலவுகள் ஏற்படலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.


கடகம்

ஆதாயம் தரும் வேலை ஒன்றில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், காரிய அனுகூலமுண்டு, கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம்.


சிம்மம்

உடல் நலம் சீராகும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், காரிய அனுகூலமுண்டு.


கன்னி

வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.


துலாம்

வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், பெற்றோர் மீதி பிரியம் கூடும், நம்பி வந்தவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.


விருச்சிகம்

மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பாராட்டும் புகழும் கூடும் நாள், உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


தனுசு

நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பூர்வீக சொத்துக்களால் ஆதாயமுண்டு.


மகரம்

வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் நடைபெறலாம், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.


கும்பம்

சிறிய வேலையொன்றுக்காக பல முறை அலைய நேரிடலாம், இறை வழிபாட்டில் ஆர்வம் கூடும், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.


மீனம்

அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம், நட்பு வட்டாரம் விரிவடையும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள்.

உன்னையே நீ அடிக்கடி சோதித்துப்பார்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல்; சந்தேக நபர்களின் விளக்கமறியல் நீடிப்பு

(மட்டக்களப்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையோர் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைதானோரில் 62 பேரினை மீண்டும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்று உத்தரவிட்டது.

குறித்த வழக்கு மாவட்ட நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு நேற்று வியாழக்கிழமை எடுத் துக்கொளளப்பட்டது.

கொரோனா காரணமாக குறித்த தாக்குதல் சம்பவத் துடன் கைதாகி விளக்கமறிய லில் வைக்கப்பட்ட அனைவரும் சட்டமா அதிபரின் பணிப்புரைக்கமைய வெவ்வேறு சிறைகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கும் நிலையில் மீண்டும் நேற்று விசாரணைக்காக ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது

பொலிஸாரின் ஆட்சேபனையுடன் அனைத்து சந்தேக நபர்களதும் விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டு இவ்வழக்கு விசாரணை அடுத்த வழக்கு தவணை செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இந்திய மீனவர்களின் அத்துமீறலால் வாழ்வாதாரம் பாதிப்பு



(கண்டாவளை)

முல்லைத்தீவு கடற்பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறிய தொழில்களால் தமது தொழில்கள் பாதிக்கப்படுவதாக முல்லைத்தீவு கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலத்தில் யுத்தத்தினாலும் ஆழிப்பேரலையினாலும் இறுதி யுத்தத்தின் போதும் என தொடச்சியாகப் பாதிக்கப்பட்டு மீள் குடியேறியுள்ள முல்லைத் தீவு மீனவ ர்கள் தற்போது தமது வாழ்வாதாரத தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் தற்போது வெளிமாவட்ட மீனவர்களின் வருகையும் இந்திய மீனவர்களின் தொழில் நடவடிக்கையும் தமது தொழில்களை முழுமையாகப் பாதித்துள்ளதாக கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் கடற்தொழிலை விட்டு வேறு தொழிலை நாட வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அதிகளவான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இந்தப் பிரதேசத்தில் கடற்தொழிலை நம்பி வாழ்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதாவது. ஆழ்கடல் தொழிலுக்குச்சென்று வரும் தொழிலாளர்களின் வாடிகளில் வலைகளை துப்பரவு செய்தல், மீன்களைப்பிரித்தெடுத்தல், போன்ற செயற்பாடுகளை முன்னெடுத்து அதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தை வைத்தே தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப் பதாகவும் இவ்வாறு இந்திய மீனவர்களின் அத்துமீறல்க ளால் தமக்கும் தொழில் இழ க்கப் பட்டுள்ளதாக பெண் தலை மைத்துவக் குடும்பங்கள் தெரிவித்துள்ளனர்.(7-4-6-315)

# கால்நடைகளை கட்டுப்படுத்துங்கள் விவசாயிகள் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள சிறுபோக பயிர் செய்கைக்கான கால்நடை கட்டுப்பாட்டு திகதி நிறைவுறுவதற்கு முன்னதாக வயல் நிலங்களில் கால்நடைகள் விடப்பட்டுள்ளதால் பெருமளவான பயிரழிவுகள் ஏற்படுவதுடன் விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடு குளத்தின் கீழ் இவ்வாண்டு 17 ஆயிரத்து 700 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது அறுவடைகள் மேற்கொள்ளப்பட்ட வயல் நிலங்களில் கால்நடைகள் கொண்டு வந்து விடப்பட்டுள்ளது இந்த நிலையில் கால்நடைகளால் தற்போது பேரழிவுகள் ஏற்பட்டு வருகின்றன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கமக்கார அமைப்புகள் கால் நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதி ஷக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-4-6-315)



முல்லைத்தீவு பாதுகாப்பு படை தலைமையகத்தின் 64 ஆவது படைப்பிரிவின் படையினர் ஒட்டுசுட்டான் பகுதி இளைஞர்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக முத்து ஐயன்கட்டுகுள ஜீவநகர் "மதுார்"" விளையாட்டுக் கழகத்திற்கு 25 ஆயிரம் ரூபாய் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை வழங்கி வைத்தனர். (படம்:-யதுபாஸ்கரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# ஏழு பேர் விடுதலைக்கு மத்திய அரசே தடை

## வைகோ குற்றச்சாட்டு

**(டில்லி)**

**"முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள 7 பேரை விடுதலை செய்வதில் மத்திய அரசு தடையாக உள்ளது" என ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ குற்றம் சாட்டினார்.**



மதுரை வந்திருந்த வைகோ செய்தியாளர்களிடம் பேசும் போது, "சதாசிவம் நீதிபதியாக இருந்தபோது தூக்குத் தண்டனையை ரத்து செய்து சிறையில் இருக்கும் 7 பேரையும் விடுதலை செய்யலாம் என்று தீர்ப்பு வழங்கினார்.

உடனே மாநில அரசு மூன்றே நாளில் சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றி ஆளுநருக்கு அனுப்பி வைத்தது.

ஆனால், ஆளுநரோ அதை குப்பையில் போட்டார். தற்போது 7 பேரையும் தமிழக அரசு விடுதலை செய்வதற்கு மத்திய அரசு தடையாக இருக்கிறது" எனத் தெரிவித்தார்.

மேலும் அனைத்து சாதியினரையும் அர்ச்சகர் ஆக்க தமிழக அரசு கொண்டு வந்த திட்டம் விமர்சிக்கப்படுகிறதே?" என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு "சமூக நீதியை பாதுகாக்கத்தான் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஏற்கனவே உள்ள அர்ச்சகர்களின் உரிமையை பறிப்பதற்காக அல்ல.

இது இந்தியாவுக்கே வழிகாட்டக்கூடிய சமூகநீதி ஆகும்" என்றார்.

கொடநாடு கொலை குறித்து மறு விசாரணை செய்யக் கூடாது என அ.தி.மு.கவினர் கூறுகின்றனரே" என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, ""கொடநாடு கொலை சம்பவம் என்பது படு பயங்கர திட்டமிட்ட படுகொலையாகும். இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட கனகராஜ் என்பவரும் படுகொலை செய்யப்பட்டார்.

அங்கு எவ்வளவு பணம், நகைகள், ஆவணங்கள் இருந்தது பற்றி அவர் வாக்குமூலம் அளித்துள்ளார்.

கொலை, கொள்ளை இரண்டும் அங்கு நடந்துள்ளது. அதனால், விசாரிக்கப்பட வேண்டும்" என்றார். (7-4)

# இந்தியப் பொருட்களின் இறக்குமதிக்கு தடை விதித்தது தலிபான்

(காபூல்)

இந்தியத் தூதரை திரும்ப அழைத்தமையினால் தலிபான்களுக்கு இந்தியா மீது கடும் கோபம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு பொருட்கள் ஏற்றுமதி செய்வதற்கு தடை விதித்துள்ளனர்.

அதேபோல இந்தியா வில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு இறக்குமதி செய்வதற்கும் தடை விதித்துள்ளனர்.

இது சம்பந்தமான இந்திய ஏற்றுமதி கூட்டமைப்பின் இயக்குநர் ஜெனரல் அஜய்-ஷகாய் கூறியதாவது.

இந்தியாவில் இருந்து ஆப்கானிஸ்தானுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தன.

அதே போல ஆப்கானிஸ்தானில் இருந்து பழவகை, உணவுப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டது.

எனவே அங்கிருந்து இனி பொருட்கள் வருவதற்கான வாய்ப்பு குறைந்துள்ளது. மேலும் டுபாய் வழியாகவும் இந்தியாவுக்கு பொருட்கள் வந்தன. அதுவும் தடுக்கப்பட்டு உள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து இந்தியாவுக்கு ரூ.6 ஆயிரம் கோடி அளவுக்கு பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன.

அதேபோல ரூ.3,800 கோடி அளவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. அவை தடைப்பட்டுள்ளன.

இந்தியாவில் பயன்படுத்தப்படும் உலர் பழங்களில் 80 சதவீதம் ஆப்கானிஸ்தானில் இருந்துதான் வந்தது.

தலிபான்களின் தடையால் இனி அவை அங்கிருந்து வராது. எனவே இவற்றின் விலை மிகவும் அதிகரிப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

இதுவரை ஆப்கானிஸ்தானுடன் இந்தியா மிகுந்த நட்புணர்வை மேற்கொண்டது.

ஆனால் இனி அதற்கான வாய்ப்புகள் குறைந்து இருப்பதால் அந்த நாட்டுடன் உள்ள வர்த்தகங்கள் முடங்கும் எனவும் அவர் கூறினார். (7-4)

### உலகளவில் கொரோனா

**உயிரிழப்பு :- 4 407 223**

**தொற்று :- 210 211 961**

**(நேற்றைய மாலை நிலவரம்)**

# பணத்துடன் முற்றிலும்

## ஆப்கான் ஜ

(காபூல்)

இரத்தக்களறி ஏற்படுவதை தவிர்க்கவே தான் ஆப்கானிஸ்தானிலிருந்து வெளியேறியதாக அந்நாட்டு ஜனாதிபதியாக இருந்த அஷ்ரப் கனி தெரிவித்துள்ளார்.

தான் கார் முழுக்க பணத்தை நிரப்பிக்கொண்டு ஆப்கானிஸ் தானில் இருந்து தப்பியோடிய தாக ரஷ்யா முன்வைத்துள்ள குற்றச்சாட்டு முழுக்க முழுக்க தவறானது எனவும் அவர் தெரி வித்தார்.

ஆப்கானிஸ்தான் தலிபான்களில் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள நிலையில் அங்கிருந்து கடந்த ஞாயிற்றுக் கிழமை அஷ்ரப் கனி தப்பியோடினார்.

அதன் பின்னர் முதன் முறையாக நேற்று முன்தினம் தனது பேஸ்புக் பக்கத்தில் வெளியிட்ட

# துருக்கியின் விமானத் தாக்குதல்; ஈராக்கின் போராளிகள் பலி

(டெஹ்ரான்)

வடக்கு ஈராக்கின் சின்ஜார் நகருக்கு அருகே குர்திஸ் போராளிகளின் நிலைகளைக் குறிவைத்து ஆளில்லா விமானம் மூலம் துருக்கி நடத்திய தாக்குதலில் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த 18 போராளிகள் கொல்லப்பட்டனர்.

குர்திஸ் போராளிகள் மருத்துவமனையாகப் பயன்படுத்தி வந்த பாடசாலைக் கட்டடம் ஒன்றை இலக்கு வைத்தே துருக்கி தாக்குதல் நடத்தியுள்ளது.

குர்திஸ் விடுதலைப் படைகளை துருக்கி தீவிரவாதிகளாக அறிவித்துள்ளது.

அத்துடன், வடக்கு ஈராக்கில் உள்ள குர்திஸ் போராளிகளின் நிலைகள் மீது துருக்கி அடிக்கடி வான் வழித் தாக்குதல்களை நடத்தி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (7-4)

# பர்கினா பசோவில் ஐ.எஸ் அமைப்பு தாக்குதல்

## 47 பேர் பலி

(சாஹேல்)

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான பர்கினா பசோவின் வடக்கே சாஹேல் பகுதியில் ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கும், அரசு படைகளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதில் 30 குடிமக்கள் மற்றும் 14 வீரர்கள் உட்பட 47 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அந்நாட்டில், அல் கொய்தா மற்றும் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய பயங்கரவாதிகள் தொடர் தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.


அவர்கள் மாலி மற்றும் நைஜர் ஆகிய அண்டை நாடுகளின் மீதும் தாக்குதல் நடத்தி வருகின்றனர். (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ஆப்கானிஸ்தான் தேசிய கொடியை ஏற்றி தலிபான்களுக்கு எதிராக மக்கள் போராட்டம்

**(காபூல்)**
**ஆப்கானிஸ்தான் தலிபான்களின் கட்டுப்பாட்டுக் குள் வந்த பின் தலிபான் அமைப்பினருக்கு எதிராக அந்நாட்டு பொது மக்கள் மத்தியில் முதல் போராட்டம் வெடித்துள்ளது.**



ஆப்கானிஸ்தானின் ஜலாலா பாத் நகரில் தலிபான்களுக்கு எதி ராக பொது மக்கள் நடத்திய போராட்டத் தின் போது 3 பேர் சுட்டுக் கொல்லப் பட்டதாக ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள் ளது.

தலைநகர் காபூலுக்கு 150 கி.மீ. தொலைவில் உள்ள ஜலாலாபாத் நகரை அண்மையில் கைப்பற்றிய தலிபான்களுக்கு எதிராக பொது மக்கள் நேற்று முன்தினம் போரா ட்டம் நடத்தினர்.

அதன் ஒரு பகுதியாக, அந்த நகரின் முக்கிய பகுதியான பாஷ் டுனிஸ்தான் சதுக்கத்தில் ஏற்றப்பட்டிருந்த தலிபான்களின் கொடியை அகற்றிவிட்டு, ஆப்கான் தேசியக் கொடியை போராட்ட க்காரர்கள் ஏற்றினர்.

அப்போது ஆர்ப்பாட்டக் காரர்கள் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் உயிரிழந்ததாகவும் ஏராள மானவர்கள் காயமடைந்த தாகவும் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்த னர்.

பாஷ்டுனிஸ்தான் சதுக் கம் மட்டுமன்றி, ஜலாலாபாத் புறநகர்ப் பகுதியான டரோ ன்டாவில் அமைந்துள்ள மைய சதுக்கத்திலும் பொது மக்கள் தலிபான் கொடிகளை அகற்றிவிட்டு தேசியக்கொடியை ஏற்றியதாகவும் அவர்கள் மீது தலிபான்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் அல் ஜஸீரா ஊடகம் தெரிவித்துள் ளது.

ஆப்கானிஸ்தான் தலி பான்களின் கட்டுப்பாட்டுக் குள் மீண்டும் வந்ததை யடுத்து, அவர்களுக்கு அஞ்சி அங்கிருந்த வெளிநாட்டவர் களும் முந்தைய ஆப்கான் அரசுக்கு ஆதரவாக செயற் பட்டவர்களும் அங்கிருந்து அவசரமாக வெளியேறி வரு கின்றனர்.

இந்த நிலையில், ஜலாலா பாத் நகரில் தலிபான்களுக்கு எதிராக பொதுமக்கள் முதல் முறையாக போராட்டத்தில் ஈடுபட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஆப்கானிஸ்தானின் பாமி யான் நகரில் தங்களால் கடந்த 1995 ஆம் ஆண்டு கொல்லப்பட்ட ஹஸாரா இனத் தலைவர் அப்துல் அலி மஸா ரியின் சிலையை தலிபா ன்கள் தகர்த்தனர்.

முந்தைய ஆட்சியின் போது இந்தப் பகுதியிலுள்ள பௌத்த கல்வெட்டுகளை யும் புராதனச் சின்னங் களையும் தலிபான்கள் தக ர்த்தது உலக அளவில் அதிர்ச்சியை ஏற்படுத்தி யது.

இந்த நிலையில், அப்துல் அலி மஸாரியின் சிலை தற் போது தகர்க்கப்பட்டுள்ளது மக்களிடையே பீதியை ஏற்ப டுத்தியுள்ளது. (7-4)

# ...டன் நான் தப்பினேன் என்பது ...ம் அடிப்படை ஆதாரமற்றது

## ...ஜனாதிபதி அஷ்ரப்கனி விளக்கம்

...விலேயே அவர் இவ்வாறு ...ாக்கமளித்துள்ளார்.

...தலிபான்களால் பேரழிவுகள் ஏற்படு ...ப்படுவதை தவிர்க்கவே நான் ஆப் ...னில் இருந்து தப்பி தற்போது ஐக்கிய ...பு அமீரகத்தில் தங்கியுள்ளேன். ...ன் காபூலிலேயே இருந்திருந்தால் ...சயம் வன்முறை வெடித்திருக்கும் ...வும் அதில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

...தலிபான்களுக்கு எதிராக போராடிய ...கான் படைகளுக்கு நன்றி தெரிவித் ... கொள்கிறேன்.

...ஆப்கான் ஜனாதிபதியே பொறுப்பில் ...மல் நாட்டை விட்டு தப்பியோடிய ...னர் எங்கள் நாட்டு படைகள் ஏன் ...ிர் துறக்க வேண்டும்? என அமெ ...காவும் நேட்டோ அமைப்பும் கேள்வி ...ப்பியுள்ளன.

...அங்கு நடந்தது என்ன? என ...ியாமல் இருப்போர் என்னை எடை ...ட வேண்டாம். பணத்துடன் நான் ...பினேன் என கூறுவது முற்றிலும் ...ப்படை ஆதாரமற்றது. அவர்கள்



பொய் கூறுகிறார்கள்.

நான் பணத்துடன் வெளியேறி னேனா? என ஐக்கிய அரபு அமீரகத்தின் சுங்க அதிகாரிகளை கேட்டு நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

எனது காலணிகளை அணியக்கூட எனக்கு நேரம் இல்லாத நிலையில் நான் எப்படி அத்தனை பணத்தை கொண்டு வருவேன்? எனது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாக எனது பாதுகாப்பு அதிகாரிகள் எனக்கு அறிவுறுத்தினர். உடனே வெளியேறுமாறு ஆலோசனை வழங்கினர்.

அதன் பேரில்தான் நான் வெளியேறினேன் எனவும் அஷ்ரப் கனி தனது பேஸ்புக் பதிவில் குறிப்பிட்டுள்ளார். (7-4)

# நைஜரில் ஆயுதம் ஏந்திய மர்ம நபர்கள் தாக்குதல்

## 37 பேர் படுகொலை

(நியாமி)

நைஜர் நாட்டின் மேற்கே தில்லாபெரி பகுதியில் டேரி -டே என்ற கிராமத்தில் புகு ந்த ஆயுதம் ஏந்திய மர்ம நபர்கள் திடீரென தாக்குதல் நடத்தினர்.

இந்த சம்பவத்தில் 15 முதல் 17 வயதுடைய 13 சிறு வர்கள், 4 பெண்கள் உட்பட 37 பேர் கொல்லப்பட்டு உள்ளனர்.

இந்த ஆண்டில் இந்த கிராமத்தில் நடந்த 3 ஆவது தாக்குதல் இதுவாகும்.

குழந்தைகள் மற்றும் குடு ம்பத்தினர் மீது நடந்த இந்த பயங்கரவாத தாக்குதலால் ஆழ்ந்த அதிர்ச்சி அடைந்து ள்ளோம் என யுனிசெப் அமை ப்பு வருத்தம் தெரிவித்து உள்ளது. (7-4)

# பசுபிக் கடலில் நிலநடுக்கம்

(சிட்னி)

பசுபிக் பெருங்கடலில் உள்ள வனுவாடு தீவு அருகே நேற்று முன் தினம் சக்திவாய்ந்த நிலநடு க்கம் ஏற்பட்டது. இந்த நில நடுக்கத்தைத் தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்ப ட்டு, பின்னர் அது திரும்பப் பெறப்பட்டது.

அந்தத் தீவின் தலைநகர் போர்ட் விலாவுக்கு 340 கி.மீ. தொலைவில், 94 கி.மீ. ஆழத் தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம், ரிக்டர் அளவுகோலில் 6.8 அல குகளாகப் பதிவானதாக அமெ ரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தின் அதிர்வுகள் வனுவாட்டு தீவுக் கூட்டத்தின் மிகப் பெரிய தீவான எஸ் பிரிடு சான்டோவில் உணரப் பட்டதாக அந்தத் தீவில் வசிப்பவர்கள் தெரிவித்த னர். (7-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரஸ் தொற்றுக்கான அறிகுறிகளை உதாசீனம் செய்யாதீர்கள்

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்

(கொழும்பு)

வைரஸ் தொற்றுக்கான சாதாரண அறிகுறிகள் தென்படும்போது அவற்றை உதாசீனப்படுத்த வேண்டாமென வைத்திய சேவைகள் தொடர்பான பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் லால் பனாப்பிட்டி மக்களை வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் புதன் கிழமை நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதாவது சமூகத்திலிருந்து நேரடியாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றவர்களுக்கே தற்போது ஒட்சிசன் தேவைப்பாடு அதிகம் காணப்படுவதாக லால் பனாப்பிட்டி சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே, தொற்றுக்கான சாதாரண அறிகுறிகள் தென்படும்போது அவற்றை உதாசீனப்படுத்தாமல், உடனடியாக வைத்தியர்களை நாடி ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை சிலர், தாம் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளோம் என்பதை அறியாத நிலையில் உள்ளனர். இத்தகையவர்களினால் தான் தீவிர நிலைமையை அடையும் வீதமும் அதிகமாகக் காணப்படுகிறது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## தலிபான்களின் ஆட்சியை ஏற்பது தொடர்பில் முடிவு செய்யப்படவில்லை

### ஊடக அமைச்சர் டலஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியை இலங்கை ஏற்குமா? என்பது குறித்து இது வரை முடிவு செய்யப்படவில்லை என அமைச்சரவை இணை செய்தித் தொடர்பாளரும் ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சகத்தை முடிவு செய்ய உத்தரவிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தானின் முன்னேற்றங்களை இலங்கை பின்பற்றி வருகிறது. சார்க் பிராந்தியத்தில் உள்ள நாடு என்பதால் ஆப்கானிஸ்தானின் நிலைமையை இலங்கை கவனத்தில் எடுத்துள்ளது என்றும் டலஸ் தெரிவித்தார்.

தலிபான்கள் தலைமையில் ஆப்கானிஸ்தானில் உருவாகும் அரசாங்கம் குறித்து இலங்கையின் நிலைப்பாட்டை வெளிவிவகார அமைச்சு விவாதித்து அறிவிக்கும்.

இதேநேரம், ஆப்கானிஸ்தான் மக்கள் நாட்டைவிட்டு வெளியேற முயன்று வருவதால் இலங்கை வருத்தமடைவதாகவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## நுவரெலியாவில் ஒரு வாரத்திற்கு கடைகள் பூட்டு

(நுவரெலியா)

கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் முகமாக, நுவரெலியா- கொட்டகலை பிரதேசத்திலுள்ள அனைத்து கடைகளையும் ஒரு வாரத்திற்கு மூடுவதற்கு கொட்டகலை பிரதேச சபை மற்றும் கொட்டகலை வர்த்தகர் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 26 ஆம் திகதி வரை ஒரு வாரத்திற்கு கொட்டகலையிலுள்ள அனைத்து கடைகளும் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொட்டகலையின் பெரும்பாலான பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை மற்றும் நகரத்தில் பல கொரோனா இறப்புகள் பதிவாகியுள்ளமை ஆகியவைகளை கவனம் செலுத்தியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கொட்டகலை பிரதேச சபை மற்றும் வர்த்தகர்கள் சங்கம் என்பன தெரிவித்துள்ளன.

மேலும் கொட்டகலை நகரத்தின் அனைத்து பகுதிகளையும் கிருமித்தொற்று நீக்கம் செய்து, சுத்தம் செய்வதற்கு தீர்மானித்துள்ளதாக பிரதேச சபை தெரிவித்துள்ளது.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2386

### ஜலோ




### கைகி




### ஜனா




### ஹரிஸ்




### ஜெசி




### நிது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ அகதிகளின் கோரிக்கையை ஏற்று அவர்களை விடுதலை செய்யுங்கள்

## செந்தமிழன் சீமான் வலியுறுத்து

**(சென்னை)**

**திருச்சி மத்திய சிறையில் உள்ள சிறப்பு முகாமில் இலங்கை தமிழர்கள் தூக்க மாத்திரைகளை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், சிறப்பு முகாம்களை மூடி அவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தமிழக அரசை வலியுறுத்தியுள்ளார்.**

இது குறித்து சீமான் டுவிட்டரில் பதிவிட்டதாவது, சிறப்பு முகாம் எனும் பெயரில் வதைக் கூடங்களில் அடைக்கப்பட்டு, கொடுந்துயருக்கு ஆளான தங்களை விடுதலை செய்யக்கோரி 15 நாட்களுக்கும் மேலாக பட்டினிப் போராட்டத்தை முன்னெடுத்த திருச்சி முகாமிலுள்ள ஈழச்சொந்தங்கள் தற்கொலை முயற்சியில் ஈடுபட்ட செய்தி



யறிந்து பதற்றமும், பெரும் மன வேதனையுமடைந்தேன்.

தொடர்ச்சியாக மனித உரிமை மீறல்களுக்கும், கொடும் சித்திர வதைகளுக்கும் ஆளாக்கப்படும். அவர்களது விடுதலை கோரிக்கையானது மிக நியாயமானது.

ஆகவே, அவர்களின் தார்மீக கோரிக்கையை ஏற்று, சிறப்பு முகாம்களை மூடி அவர்கள் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென தமிழக அரசை வலியுறுத்துகிறேன் என சீமான் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# இலங்கை மீன்களுக்கு வெளிநாடுகளில் அதிக கேள்வி

(கொழும்பு)

நாட்டில் கொவிட் தொற்று பரவலுக்கு மத்தியிலும், கடந்த மாதத்தில் உணவுக்கான மீன் ஏற்றுமதியின் ஊடாக 106 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் பெறப்பட்டதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இலங்கையின் மீன் ஏற்றுமதி, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2.7வீத பங்களிப்பு செய்கிறது. கொவிட் தொற்று பரவலுக்கு மத்தியிலும், இந்த ஏற்றுமதி மேற்கொள்ளப்பட்டதாகவும் ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் பிரான்ஸ், இத்தாலி, அமெரிக்கா, ஜேர்மன், இங்கிலாந்து, ஜப்பான், நெதர்லாந்து, ஹொங்கொங், கனடா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இலங்கை மீன்களுக்கு அதிக கேள்வி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பிரான்ஸ் நாட்டில் இருந்தே அதிகமான கேள்வி காணப்படுகிறது. அந்நாட்டிலிருந்து 23 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் பெறப்பட்டதாகவும் சபை தெரிவித்துள்ளது.

கொவிட் முதல் அலை ஆரம்பித்து, கடந்த ஆண்டு இறுதி வரையிலும் இந்த ஏற்றுமதி செயல்முறை தடைப்படவில்லை. அந்த ஆண்டிலேயே 189 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளது. (நி-5)

# பாராளுமன்றத்தின் சமையலறை சிற்றுண்டிச்சாலைகளுக்கு பூட்டு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் காரணமாக பாராளுமன்றத்தின் சமையலறை மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பன மூடப்பட்டுள்ளன என பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ இதனைத் தெரிவித்தார்.

இதனால் பாராளுமன்றில் பணியாற்றும் அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் தற்காலிகமாக உணவுகளை வெளியில் இருந்து கொண்டுவருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், உணவு பொதிகள் பாராளுமன்ற வளாகத்திற்குள் எடுத்துச் செல்லப்படுவதற்கு முன்னர் பாதுகாப்பு காரணிகளுக்காக அதனை சோதனைக்குட்படுத்த பாதுகாப்பு தரப்பினருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பாராளுமன்ற அதிகாரிகள், பணிக்குழாமினர் உள்ளிட்ட 275 பேருக்கு அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 12 பேருக்கு தொற்றுறுதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)



மாத்தறை - பொல்ஹேன கடற்கரையில் இறந்த நிலையில் திமிங்கலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது. திமிங்கலத்தின் இறப்பிற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## புகைப்பதை நிறுத்தினால்

ஒரு நண்பர். ஆனந்தமாக சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார். இந்தப் பழக்கத்தை விட்டுக் கொள்ளுங்கள் என்று சொல்லிப் பார்த்தேன்.

"விட்டுவிடலாம் என்று தான் பார்க்கின்றேன்... ஆனால் முடியவில்லையே!" என்றார். "மனது வைத்தால் எல்லாம் முடியும்!" என்றேன். அவர் கொஞ்சநேரம் யோசனை செய்தார். அப்புறம் சொன்னார் : "சரி சேர் இதுதான் நான் பிடிக்கிற கடைசி சிகரெட்" அப்படி என்று சொல்லி ரொம்ப அழுத்தமாக புகையை உள்ளுக்குள் இழுத்தார். அதற்கு பின்பு அந்தத்துண்டு சிகரெட்டை வீசி எறிந்துவிட்டார்.

ஒருத்தர் இதுமாதிரி தீர்மானம் செய்து தன்னுடைய கடைசி சிகரெட்டைத் தூக்கி எறிந்துவிட்டார். இதற்குப் பிறகு அவர் உடம்பிலே படிப்படியாக என்னென்ன மாற்றங்கள் நடக்கின்றது என்று American Cancer Society ஒரு விபரப்பட்டியலை வெளியிட்டிருக்கு! அது என்ன விபரம் தெரியுமா?

ஒருத்தர் புகைப்பிடிக்கின்ற பழக்கத்தை நிறுத்துகிறார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படி அவர் நிறுத்திய 20 நிமிடங்களுக்குள்ளே உயர் இரத்த அழுத்தம், உடல் வெப்பம், நாடித் துடிப்பு, இதெல்லாம் சரியான நிலைக்கு வந்துவிடும்.

8 மணி நேரத்திற்குள்ளே Smoker's breath மறைந்து விடும். இரத்தத்தில் உள்ள Carbon monoxide அளவு குறையும். ஒட்சிசன் அளவு கூடும். சரியான அளவுக்கு வந்துவிடும்.

ஒருத்தர் கடைசி சிகரெட்டை எறிந்துவிட்டார். 24 மணி நேரத்திற்குள்ளே மாரடைப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு குறைந்துவிடும். 48 மணி நேரத்திற்குள்ளே உணர்வு நரம்புகளின் முனைப்பகுதிகள் மறுபடி ஒன்று சேருகின்றன.

அதனாலே நாவின் சுவையுணர்வு, மூக்கின் முகரும் சக்தி இதெல்லாம் மேம்படுகிறது. நல்ல நிலைமைக்கு வருகிறது. சிகரெட்டை நிறுத்தினால் மூன்று நாளுக்குள்ளே மூச்சு விடுகிறது சுலபமாகின்றது.

இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் இரத்த ஓட்டம் மேம்படுகிறது. நடப்பது சுலபமாகிறது. நுரையீரல் கொள்ளளவு 30 சதவீதம் அதிகரிக்கிறது. ஒன்று முதல் 9 மாதங்களுக்குள் சுவாசக் குறைபாடுகள் நீங்குகின்றது. (Sinus Congestion and Shortness of Breath Decrease)

நுரையீரலில் உள்ள அசுத்தம் வடிகட்டும் திசுக்கள் சரியாக வேலை செய்ய ஆரம்பிக்கின்றது. (Silia that sweep debris from your lungs grow back)

ஒரு வருடத்திற்குள்ளே இதய அழுத்த நோய்க்கான வாய்ப்பு (Excess risk of coronory heart desease is half that of a person who smokes) பாதியாக குறைகிறது.

ஐந்து வருடத்திற்குள்ளே ஒரு நாளைக்கு 1 பக்கெட் சிகரெட் பிடிக்கிறவர்களிலே நுரையீரல் புற்றுநோயினால் சாகிறவர்களின் எண்ணிக்கை பாதியாக குறைகிறது. புற்றுநோய் செல்கள் சீரமைக்கப்படுகின்றன.

ஆக ஒருத்தர் புகைப்பிடிக்கிறதை விட்டுவிட வேண்டும் என்று தீர்மானம் செய்து தன் கையிலே இருக்கின்ற சிகரெட்டை இது தான் கடைசி என்று தூக்கி எறிந்து விட்டால் அதற்கு அப்புறம் படிப்படியாக இவ்வளவு நன்மைகளும் மாற்றங்களும் ஏற்படுகிறதாக American Cancer Society தெரிவித்து இருக்கின்றது.

அதனாலே புகைப்பழக்கம் உள்ளவர்கள் இதையெல்லாம் கொஞ்சம் யோசித்துப் பார்த்து அந்தப் பழக்கத்தை விட்டுவிடுவது நல்லது. ஆனால் அதையெல்லாம் நாங்கள் சொன்னால் யார் கேட்கிறார்கள்?

என்னுடைய நண்பர் ஒருத்தர். புகைப்பழக்கம் உள்ளவர். அவர் என்னிடம் சொன்னார். "சேர் சிகரெட் பிடிக்கின்ற பழக்கத்தை விட்டுட்டு தூங்குவது என்னை பொறுத்தவரைக்கும் ஒன்றும் கஷ்டமான செயல் இல்லை சேர்! அது ரொம்ப சுலபம்" என்றார்.

"எப்படிச் சொல்லுகிறீர்கள்?" என்றேன்.

"நான் ஏற்கனவே இருபது தடவை அந்தப் பழக்கத்தை விட்டிருக்கேன்!" என்றார் ரொம்ப பெருமையாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைத் தேர்தல்கள்

13

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



எனவே "உரியசட்ட மூலத்தை இயற்றி மோட்டார் வாகன உரிமக் கட்டணத்தை நாம் அறவிடக்கூடிய ஏற்பாடுகளை செய்யுமாறு" மத்திய அரசாங்கத்தை இந்தச் சபை கோர வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஓடுகின்ற மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்யும் உரிமை மாகாண அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட வேண்டுமென்றும் கோர வேண்டும். மாகாணத்தில் நிரந்தரமாக ஓடுகின்ற வாகனங்கள் யாவும் அந்த மாகாண அரசின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் போது கொழும்பிலும் ஓடுகின்றபோது உரிய மாகாணங்களிலும் பதிவு செய்யப்பட வேண்டும்.

துறைமுகங்களும் இறங்கு துறைகளும்சம்பந்தமாக முதலமைச் சர் பின்வரும் பிரேரணையை முன் வைத்தார்.

### துறைமுகங்களும் இறங்கு துறைகளும்

13ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் பாரிய துறைமுகங்களெனப் பாராளுமன்றத்தில் பிரகடனம் செய்யப்பட்ட துறைமுக்ங்கள் தவிர்ந்த ஏனையவை மாகாண அரசாங்கத்திற்குரியவையாகும். இலங்கையில் பாராளுமன்றச் சட்டத்தினால் கொழும்பு, திருகோணமலை ஆகிய இரு துறைகங்களுமே பிரகடனப்படுத்தப் பட்டிருக்கிறது.

எனவே வடக்கு-கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் திருகோணமலை தவிர்ந்த ஏனைய துறைமுகங்களும், இறங்கு துறைகளும் மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும். அது இன்னமும் நடைபெறவில்லை. சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அந்த விடயத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தும்படியும் இந்தச் சபை கோர வேண்டும்.

கல்வித்துறை சம்பந்தமாக முதல் அமைச்சர் பிரேரித்தவை கீழே தரப்படுகின்றன.

### கல்வித்துறை

கல்வித்துறையில் குறிப்பிடத்தக்களவு அதிகாரப்பரவலாகல் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும் அடிப்படையான விடயங்கள் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டி லேயே உள்ளது. ஏ. பி. சி தர பாடசாலைகளில் அதிபர்கள் நியமனம் என்பது இன்னும் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது. இடமாற்றம், ஒழுங்குக் கட்டுப்பாடு கள், ஆசிரியர்கள் அனைவரும் மாகாண அரசாங்கத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும்.

எனவே பாடசாலை அதிபர்கள், ஸ்ரீலங்கா கல்வி நிர்வாக சேவை அதிகாரிகள் ஆகியோரின் நியமனத்தையும் மாகாண அரசாங்கம் மேற்கொள்ளக் கூடியதாக அதிகாரப் பரவலாக்கல் இடம் பெறவேண்டுமென்று இந்தச் சபை கோர வேண்டும்

அத்தோடு பரீட்சைகளை மத்திய அரசாங்க பரீட்சைத் திணைக்களத்தின் அனுமதியுடனேயே நாம் மேற்கொள்ள முடியும். இதை நீக்கி மாகாண அரசாங்கம் சுயமாகத் தீர்மானித்துப் பரீட்சையை நடத்தக் கூடிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும். மேலும் பாட நூல்களை உருவாக்கும் விடயத்தை தீர்மானிக்கும் அதிகாரம் மாகாண அரசாங்கத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

வடக்கு - கிழக்குமாகாணத்திலுள்ள ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகள் அனைத்தும் மாகாண அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட வேண்டும். பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை இந்தியாவில் தேசிய முக்கியத்துவமான பல்கலைக்கழகங்கள் தவிர ஏனையவை மாநில அரசிக்குரியவை.

இலங்கையிலும் பாராளு மன்றம் தேசிய முக்கியத்துவமான பல்கலைக் கழகங்கள் எவை எனத் தீர்மானிப்பதுடன் வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள பல்கலைக்கழகங்களை மாகாண அரசிடம் ஒப்படைக்க வேண்டும். கல்வித்துறை சார்ந்த விடயங்களில் தமிழ் பேசும் மக்கள் மிகவும் புறக்கணிக்கப்பட்டு வந்த வரலாறே இந் நாட்டில் இருக்கிறது. அத்துறை சார்ந்த அதிகாரங்கள எம்மிடம் வழங்கப்பட வேண்டும். தங்கியிருக்கும் நிலைமையைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. எனவே யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம் ஆகியன எம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டுமென்றும் பிரேரிக்கிறேன்.

வேலை வாய்ப்புக்கள் சம்பந்தமாக முதலமைச்சர் பிரேரித்தவை கீழே தரப்படுகின்றன

### வேலைவாய்ப்பு

மாகாண அரசாங்கத்திற்குரிய வேலைவாய்ப்புக்களை மாகாண அரசாங்கமே செய்ய வேண்டும். ஆனால் வேலைவாய்ப்பு என்ற விடயத்தைக் கொண்டுபோய் ஒருங்கியை நிரலில் போட்டிருக்கிறார்கள். ஒருங்கியைநிரலில் 21ஆவது அம்சமாக இருக்கும்வேலை வாய்ப்பு என்பது மாகாண மட்டத்தில் வேலை வாய்ப்பைத் திட்டமிடல் விசேட வேலை வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டம், இளைஞர் வேலை வாய்ப்புச் செயற்பாடுகளை மேம்படுத்தல், தொழில் நுட்ப ஆள்வலு நிகழ்ச்சித்திட்டம் என்பன இடம் பெற்றிருக்கின்றன. மாகாண அரசாங்கம் தொடர்பான மேற்படி விடயங்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு உரியது அல்ல. மாகாண அரசாங்கத்தின் வசமே இருக்க வேண்டும்.

ஒருங்கிைபநிரலில் உள்ள 21 ஆவது பிரிவு அனைத்தும் மாகாண நிரலிற்குமாற்றப்பட வேண்டும்.

அதுமட்டுமன்றி உள்ளூராட்சி, உள்ளூர் நிர்வாகம் இவைகளிலெல்லாம் மத்திய அரசாங்கம் இன்றும் ஊழியர்களை நியமித்து வருகிறது. அண்மையில் (1989) 11 எழுதுவினைஞர்களைத் திருகோணமலைக்கு கொழும்பில் தெரிவு செய்து அனுப்பியிருக்கிறார்கள். இது சமாதான நிலைமைகளை மேலும் குழப்புமேதவிர நல்ல நோக்கம் கொண்டதாகத் தெரியவில்லை. இதனால் இந்த மாகாணத்திற்குட்பட்ட எந்த வேலைவாய்பிலும் மத்திய அரசாங்கம் தலையிடக் கூடாது என்று இந்தச் சபை கோர வேண்டும்.

சுகாதாரம் சம்பந்தமாக முதலமைச்சர் பிரேரித்தவை கீழே தரப்படுகின்றன

### சுகாதாரம்

சுகாதாரம் பற்றிய விடயம் சட்டத்திலே மிகவும் தெளிவாக குறிப் படப்பட்டிருக்கின்றது. அதாவது மாகாணசபை நிரலில்11ஆவது பிரிவில் (போதனா வைத்தியசாலைகள், விசேட நோக்கங்களுக்காக நிறுவப்பட்ட மருத்துவமனைகள் தவிர) பொது மருத்துவ மனைகள், கிராமிய மருத்துவமனைகள், மகப் பேற்று மருத்துவ மனைகளை நிறு வுதலும் பராமரித்தலும், பொது சுகாதார சேவைகள், சுகாதாரக்கல்வி; போசணை, சிறுவர் பராமரிப்பு, உணவும் உடல் நலமும், சுற்றாடல், சுகாதாரம், மாகாணத்திற்கான சுகாதார அபி விருத்தித்திட் டத்தையும் ஆண்டுச் சுகாதார திட்டத்தையும் அமைத்துச் செயற்படுத்தல், மருந்து வகைகளைப் பெற்றுகொடுத்தல் தவிர மேலே குறித்த வகையான வைத்தியசாலைகளுக்கு ஏனைய வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன.

இத் துறையிலும் குறிப்பிடத்தக்களவு அதிகாரப் பரவலாக்கல் நடைபெற்றிருந்தாலும் சிலசிக்கல்களும் உள்ளன. வைத்திய சாலைகளுக்கு மருத்துவ உத்தியோகத்தர்களை நியமனம் செய்தல், இடமாற்றம் செய்தல் ஆகிய விவகாரங்களை மத்திய அரசு தனது கைகளிலேயே வைத்திருக்கிறது.

வடக்கு-கிழக்கில் உள்ள இரண்டு வைத்தியசாலைகளைத் தவிரஏனையவை எம்மிடம் தரப்பட்டுள்ளன. ஆனால் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையை மாகாண அரசிடம் ஒப்படைக்கும்படி இந்தச் சபை கோர வேண்டும். ஏனெனில் மாகாண மட்டத்திலான வேலை வாய்ப்புக்களையும் மருத்துவ உத்தியோகத்தர்களையும் உருவாக்க எமக்கு இவ் வைத்தியசாலை தேவை.

**உணவுத்துறை, உணவு விநியோகம் சம்பந்தமாக முதலமைச்சர் பிரேரித்தவை கீழே தரப்படுகின்றன.**

உணவுத்துறை, உணவு விநியோகம் ஆகியனமாகாண அரசிற்கு உரியதென்று சட்டம் கோடிட்டுக் காட்டியபோதிலும் உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரிகளோ, உத்தியோகத்தர்களோ மாகாண அரசாங்கத்திடம் வழங்கப்படவில்லை. மத்திய அரசுவிரும்பினால் சில உணவுக் களஞ்சியங்களையும் சில உத்தியோகத்தர்களையும் வைத்திருக்கலாம்.

முன்னைய பாராளுமன்ற அமைச்சர் காங்கேசன்துறை, அம்பாறை, திருகோணமலை (கிளப்பன் பேர்க்) ஆகிய மூன்று உணவுக் களஞ்சியங்கள் தவிர ஏனையவற்றை எம்மிடம் ஒப்படைப்பதாகக் கூறியிருந்தார். கடந்தபாராளுமன்ற அமைச்சர்கள் எந்தெந்த உணவுக் களஞ்சியங்களை எந்தெந்த மாகாணத்திற்கு உரியதுஎன்று பிரித்து எல்லா வகையான ஊழியர்கள் மாகாண அரசின் கீழ் வருவார்கள் என்றெல்லாம் ஒழுங்கு முறையாகத் திட்டமிட்டார்கள். (தொடரும்...)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 மில்லியனுக்கும் அதிகமானோர் இரு தடுப்பூசிகளையும் பெற்றனர்

(கொழும்பு)

நாட்டில்கொவிட்-19க்கு எதிராக ஐந்து மில்லியனுக்கும் அதிகமான நபர்கள் முழுமையாக தடுப்பூசி பெற்றுள்ளனர். அதன்படி இதுவரை 51 இலட்சத்து 24 ஆயிரத்து 185 நபர்கள் கொவிட்-19 தடுப்பூசியின்இரண்டு டோஸ்களையும் பெற்றுள்ளதாகசுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-5)

# பீரிஸ்- பாக்லே சந்திப்பு



(கொழும்பு)

புதிய வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ்க்கும், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நடைபெற்றது.

வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் பீரிஸ் நேற்று தமது கடமைகளை அமைச்சில் பொறுப்பேற்றார்.

அதன்பின்னரே மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

புதிய வெளிவிவகார அமைச்சருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்த இலங்கைக்கான இந்தியத் தூதுவர், இரு நாட்டு உறவை மேலும் வலுப்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடினார். (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்



## சந்தோச வாழ்வு தரும் திருவோணம்



சர்வேஸ்வரனிடம் வரம் பெற்ற எலி மறு பிறவியில், அசுர குலத்தில் மாவலி என்ற பெயரில் பிறந்து மன்னராகி கேரளாவை ஆட்சி செய்து வந்தார். அவரது ஆட்சி காலத்தில் மக்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வந்தனர்.

தனது ஆற்றலாலும், தவ வலிமையாலும் மாவலி மன்னர், தேவர்களை தோற்கடித்தார். மூவுலங்களையும் ஆளும் ஆதிக்கம் பெற்று மகாபலி சக்கரவர்த்தியானார். பின்னர் அவர் அசுவமேத யாகம் நடத்தத் தொடங்கினார். இதைப்பார்த்து தேவர்கள் அச்சமுற்று, பகவான் ஸ்ரீமன் நாராயணனை சரணடைந்தனர். தேவர்களின் வேண்டுதலை நிறைவேற்றும் வகையில், வாமன அவதா ரம் எடுத்து பலி முன்தோன்றி மூவடி மண் வேண்டும் என்று தானம் கேட்டார். அதற்கு இசைந்த பலி மன்னன் நீரை வார்த்து தானம் கொடுத்தார்.

தானம் கேட்க வந்திருப்பது பகவான் மதுசூதனன் என்பதை புரிந்து கொண்ட அசுர குரு சுக்ராச்சாரியார் ஒரு வண்டாக மாறி கமண்டல துவாரத்தை அடைத்தார். இதை பார்த்த பகவான் குறுநகை புரிந்தவாறே தர்ப்பையால் கமண்டலத்தின் வாயை குத்தினார். அதனால் சுக்ராச்சாரியார் ஒரு கண்ணை இழக்க நேரிட்டது. பின்னர் வாமனர் திரி விக்ரமனாக வளர்ந்தார்.

ஓரடியால் சத்யலோகத்தை அளந்து ஓங்கி உலகளந்த உத்தமனானார். ஈரடியால் மண்ணையும், விண்ணையும் அளந்தார். 3ஆவது அடியில் பலி மன்னரின் தலையில் தனது பொற்பாதத்தை வைத்து அவரை பாதாள லோகத்தில் அழுத்தி பேரருள் புரிந்தார்.

அப்போது பலி மன்னர் பரமந்தாமனிடம் 'பகவானே, நான் மிகப்பெரிய பேறு பெற்றேன். அடியேன் பேறு பெற்ற இத்திருநாளை எல்லா மக்களும் இன்பநாளாக கொண்டாட அருள்புரிய வேண்டும்' என்று வேண்டிக் கொண்டார். அதற்கு பகவானும் அருள் செய்தார்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## சுகாதார விதிமுறை மீறல் 229 பேர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய மேலும் 229 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 55 ஆயிரத்து 402 ஆக உயர்வடைந்துள்ளது.

இவர்களில் 52 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் 2 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (நி-5)

## ரயில்வே ஊழியர்கள் 360 பேருக்கு கொரோனா

## மூவர் மரணம்

(கொழும்பு)

ரயில்வே திணைக்களத்தில் இதுவரையில் 360 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று ரயில்வே பொது முகாமையாளர் தம்மிக ஜயசுந்தர நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றால் இதுவரை மூவர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை, ரயில் நிலையப் பொறுப்பதிகாரிகள் உள்ளிட்ட ஊழியர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ள காரணத்தால் 10 ரயில் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

இவ்வாறு மூடப்பட்ட ரயில் நிலையங்களில் கரையோர மார்க்கத்திலான 5 ரயில் நிலையங்களும் அடங்குகின்றன என்றும் ரயில்வே பொது முகாமையாளர் மேலும் குறிப்பிட்டார். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை


| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 140 | 80 |
| உருளைக்கிழங்கு | 130 | 170 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 160 |
| தக்காளி | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 160 | 170 | 160 |
| கரட் | 180 | 170 | 160 |
| பூசணி | 100 | 100 | 100 |
| புடோல் | 100 | 90 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 160 | 170 | 160 |
| பெரிய வெங்காயம் | 120 | 120 | 120 |
| பாகற்காய் | 250 | 250 | 220 |
| வெண்டிக்காய் | 60 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 |
| பயற்றங்காய் | 140 | 160 | 100 |
| லீக்ஸ் | 200 | 220 | 220 |
| பீற்றூட் | 80 | 70 | 80 |
| கறிமிளகாய் | 250 | 200 | 220 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 250 |
| போஞ்சி | 200 | 320 | 200 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | 100 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 30 |
| தேசிக்காய் | 100 | 120 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 50 |
| இராசவள்ளி | -- | -- | --- |
| வெங்காயப்பூ | 180 | 180 | 160 |
| முள்ளங்கி | 80 | 70 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 50 |
| வல்லாரை | 20 | 60 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 40 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## வலிமை



சிங்கமும் கழுதைப் புலியும் பசுவைப் பிடித்து வைத்திருந்தன. ஒரு நாள் சிங்கம் பசுவைக் கொன்றது. கழுதைப்புலி தன் குட்டியை சிங்கத்திடம் அனுப்பி தன் பங்கைக் கேட்டது. கழுதைப் புலியின் பங்காக பசுவின் குடலை மட்டும் கொடுத்து அனுப்பியது சிங்கம்.

கழுதைப்புலியோ "நீ ஏன் குடலைக் கொண்டு வந்தாய்? அரைவாசிப் பங்குதானே நமக்கு உரியது?" என்று கேட்டது. குட்டி கழுதைப் புலி சொல்லியது.

"நான் சின்னப்பயல். பெரியவர்கள் கொடுப்பதைத்தான் கொண்டு வரமுடியும். நான் எப்படி சிங்கத்தோடு விவாதிக்க முடியும்" அதைக்கேட்டு கோபமான கழுதைப்புலி அந்தக் குடலோடு சிங்கத்தைப் பார்க்கப் போனது.

சிங்கம் உணவை உண்டு குகைக்குள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. கழுதைப்புலி வந்ததைக் கண்டு கண்களை அச்சமூட்டும் வகையில் வைத்திருந்தது.


"ஏன் இங்கே வந்தாய்?" கர்ஜித்தபடி சிங்கம் கேட்டது. பசுவில் பாதி கேட்க வந்த கழுதைப் புலி தற்போது தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டு பேசியது.

"ராஜ சிங்கமே ! நீங்கள் குடல் அனுப்பியதற்கு மிக்க நன்றி, ஆனால் அதனை உங்களிடமே சேர்க்க முடிவு செய்து விட்டோம்."

குடலை சிங்கத்திடம் கொடுத்து விட்டு திரும்பிய கழுதைப்புலியிடம் குட்டி கேட்டது. பசுவில் பாதி கேட்கப்போன நீங்கள் குடலையும் கொடுத்து விட்டு வருகிறீர்களே? "மகனே... சிங்கம் மிகக் கொடூரமாக இருந்தது. அதைக்கண்டு நடுங்கி விட்டேன். எனவே எனது பங்கையும் கொடுத்துவிட்டுப் பாராட்டி விட்டு வந்தேன். எல்லாம் நன்மைக்காக" என்றது தாய் கழுதைப் புலி.

நீதி : நம்மை விட வலிமையானவர்களைக் கோபப்படுத்துவதை விட அவர்களை சாந்தப்படுத்துவதே பாதுகாப்பானது.

# மகாபாரதம்




பிதாமகரின் இவ்வுரையைக் கேட்டதும், தருமர் மிகவும் பணிவுடன் அவரை நெருங்கி அவர் பாதங்களைத் தொட்டு வணங்கினார்.

வில்லாற்றல் மிக்க பீஷ்மர் மிகவும் மகிழ்ந்து தருமரை அமருமாறு பணித்தார். பின்னர் சந்தேகங்களைக் கேட்குமாறு பணித்தார்.

**பீஷ்மர் தருமங்களைச் சொல்லுதல்**

தருமர் கண்ணனையும் பீஷ்மரையும் வணங்கிவிட்டுத் தம் சந்தேகங்களைக் கேட்கத் தொடங்கினார்.

"ராஜநீதியில் எல்லாத் தருமங்களும் அடங்கியுள்ளன. ராஜநீதி தவறுமானால் உலகம் துன்புறும். ஆகவே இந்த ராஜதருமங்களை எனக்கு விரிவாக எடுத்துரைக்க வேண்டும்" என்றார்.

பீஷ்மர் அதன்படி ராஜதருமங்களைக் கூறத் தொடங்கினார். "நாடாளும் மன்னன் எப்போதும் முயற்சியுடன் இருக்க வேண்டும். முயற்சி இல்லாதவனுக்குத் தெய்வத்தின் உதவி கிடைக்காது. வண்டிக்கு இரு சக்கரங்களைப் போல வாழ்க்கைக்கு இவ்விரண்டும் தேவை. இவ்விரண்டில் முயற்சியே மேலானது. ஒருவேளை உன் முயற்சி வீணாய்ப் போனாலும் அது குறித்து வருந்தக்கூடாது. எப்போதும் விடாமுயற்சி என்பது அரசர்களின் மிகப் பெரிய நீதியாகும்.

"முயற்சியற்ற மன்னனையும் வேதம் ஓத வெளியே செல்லாத வேதியனையும் பாம்பு எலிகளை விழுங்குவது போல இப்பூமி விழுங்கிவிடும்" என்று சுக்கிராச்சாரியார் கூறியிருக்கிறார்.

ராஜ தருமத்தில் இரட்சண தருமம் என ஒன்றை அரசன் கவனிக்க வேண்டும். இந்த இரட்சண தருமத்தை அரச தருமங்களுள் வெண்ணெய் போன்றது எனப் பிரகஸ்பதியும், சுக்கிரரும், விசாலாட்சாரும், பரத்வாஜரும், கௌரசிரசும், இந்திரனும் போற்றியுள்ளனர். இந்த இரட்சண தருமம் நிறைவேறும் வகையைக் கூறுகிறேன்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியடைந்த நேரத்தில்தான் ஒவ்வொருவனும் உண்மை என்பது எவ்வளவு மகத்தானது என்பதை உணர்ந்து கொள்கிறான். – ஏ.ஹெரால்டு கெவான்

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## ஆட்சியாளர் செய்த பாவ பழி நாட்டைச் சூழ்ந்து நிற்கிறது!

ஆட்சி முறை என்பது ஆளுக்கு ஆள், கட்சிக்குக் கட்சி வேறுபடவே செய்யும்.

இதில் அரசாளும் திறன் யாரிடம் இருக்கிறதோ அவர் – அவர்கள் சாதனை புரிகின்றனர்.

இங்கு அரசாளும் திறன் என்பது எதைக் குறித்து நிற்கிறது என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்டால் அதற்கான பதில் மக்கள் நலன் பற்றி யார் சதா சிந்திக்கின்றார்களோ அவர்களால் மட்டுமே சிறப்பான ஆட்சியை வழங்க முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரை அரசாங்கத்தை மக்கள் அமைக்கின்றனராயினும் மக்கள் பற்றிய சிந்தனை அரசாங்கத்திடம் இருப்பதில்லை என்பதை அறுதியிட்டுக் கூற முடியும்.

அவ்வாறானதொரு சிந்தனை அரசாங்கத்திடம் இருந்திருக்குமாயின், இலங்கையில் கொடும் யுத்தம் நடந்திருக்கமாட்டாது.

ஆம், எல்லா இன மக்களும் இந்த நாட்டின் பிரஜைகள். அவர்கள் அனைவரும் சுய கௌரவத்துடனும் அனைத்து உரிமைகளுடனும் வாழ வேண்டியவர்கள். அந்தந்த இன மக்களின் மொழியும் சமயமும் பாதுகாக்கப்பட வேண்டும்.

இதில் ஓர் இனத்தை – ஒரு சமயத்தை முதன்மைப்படுத்துதல் என்ற பேச்சுக்கே இடமிருக்கலாகாது என்றவாறாக, அரசியலமைப்பு இருந்திருக்குமாயின், இன யுத்தம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போயிருக்கும்.

என்ன செய்வது இலங்கை பௌத்த சிங்களவர்களின் நாடு.

ஏனைய இனத்தவர்கள் இந்த மண்ணில் இருந்துவிட்டுப் போகலாம் என்பதான மனநிலை கொண்டவர்களால் நாட்டில் ஒற்றுமையை ஒருபோதும் ஏற்படுத்த முடியாது.

உண்மை, தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள ஆட்சியாளர்கள் நடத்திய யுத்தத்தால் நாடு கந்தறுந்து போனது.

தமிழ் மக்களை அழித்து இலங்கை தனி பௌத்த சிங்கள நாடு என்பதை நிலைநாட்டுவதற்காக உலகம் எல்லாம் கடன் வாங்கி யுத்தம் புரிந்து அப்பாவித் தமிழ் மக்களைக் கொன்றொழித்துவிட்டு இறுமாப்புடன் இருந்தவர்கள் இன்று கொரோனாத் தொற்றில் இருந்து நாட்டைப் பாதுகாக்க முடியாமல் தவிக்கின்றனர்.

நாட்டை முடக்குங்கள் என்று மருத்துவர்கள் கெஞ்சுகின்றனர். எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுகின்றன. பௌத்த பீடங்களும் வலியுறுத்துகின்றன.

ஆனாலும் நாட்டை முடக்கினால் பெரும் பஞ்சம் இலங்கையைக் காவு கொள்ளும் என்கிறது ஆட்சித் தரப்பு.

ஆக, கொரோனாவின் பேரலையில் சிக்குண்ட இலங்கை மீளுமா? அவ்வாறு மீண்டாலும் சீனாவிடம் இருந்து விலக்குப் பெற முடியுமா? என்ற கேள்விகள் நிறையவே இருக்கின்றன.

என்ன செய்வது சொந்த நாட்டு மக்களைக் கொன்றொழித்த பாவ பழி நாடு முழுவதையும் சூழ்ந்து நிற்கிறது. யாரென்ன செய்ய முடியும்.

# யாழில் கொரோனா தீவிரமடைந்துள்ளது

## பொறுப்பு, எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள்

### பொது மக்களுக்கு அரச அதிபர் மகேசன் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கொரோனா அபாயம் தீவிரமடைந்துள்ள நிலையில் மாவட்ட மக்கள் மிக எச்சரிக்கையுடனும் பொறுப்புணர்வுடனும் நடந்து கொள்ளவேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை யாழ். மாவட்ட செயலகத்தில் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் கருத்துரைக்கும் போதே க.மகேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள நிலையில் அரசாங்கம் அறிவித்திருக்கிற புதிய சுகாதார விதிமுறைகளை மிக இறுக்கமாக மிக மிக அவசிய தேவைகளுடைய பொது மக்கள் வீட்டை விட்டு வெளியே செல்லக் கூடாது என்ற கட்டுப்பாட்டினை மூன்று வாரங்களுக்கு நாங்கள் கடைப்பிடிக்க வேண்டிய தேவையுள்ளது.

மக்களை பாதுகாப்பதற்காகவே இந்த நடைமுறைகளை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது. அத்தோடு பொதுமக்களும் சமூக பொறுப்புணர்ந்து செயற்பட வேண்டிய காலமாக இது காணப்படுகின்றது.

தற்பொழுது வைத்தியசாலைகளில் கூட இட நெருக்கடி சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. எனவே தற்போதைய சூழ்நிலையில் அனைவரும் உணர்ந்து தமது செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும். குறிப்பாக தற்போது புதிய வழிகாட்டலின்படி,

வழிபாட்டிடங்களில் ஒன்று கூடுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய குடும்ப நிகழ்வுகள், திருமண நிகழ்வுகள் போன்றவையும் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கட்டுப்பாட்டுடன் நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே புதிய சுகாதார நடைமுறையினை பொதுமக்கள் பின்பற்றி வீடுகளிலிருந்து தேவையில்லாது வெளியேறுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம)

## சுய தனிமைப்படுத்தலை பின்பற்றிய மக்களுக்கு

### பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் பாராட்டு

(கொழும்பு)

இந்த வாரம், பல நகரங்களை சுயமாக தனிமைப்படுத்த விடுத்த தமது கோரிக்கைக்கு செவிசாய்த்த பொதுமக்களுக்கு இலங்கையின் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் நன்றி பாராட்டியுள்ளது.

தமது கோரிக்கைக்கு அமைய நாட்டின் பல நகரங்களைச் சேர்ந்த மக்கள் சுய தனிமைப்படுத்தலை பின்பற்றியதால் அவை முடங்கியுள்ளன என்று இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

தொற்றுநோயிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு பொதுமக்களுக்கு அவர் அழைப்பு விடுத்தார்.

தினசரி கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழப்போர் மற்றும் தொற்றுக்குள்ளாவோர் எண்ணிக்கை அதிகரிப்பதைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைபிடிப்பது மற்றும் சுய தனிமைப்படுத்துதல் மட்டுமே உதவும் என்று ரோஹண கூறினார்.

பெரும்பாலான குடிமக்கள் வழிகாட்டுதல்களைக் கடைப்பிடிப்பது தெளிவாகத் தெரிகிறது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

நிலவும் கோவிட் - 19 தொற்றுநோய் மூலம் அரசியல் ஆதாயம் தேடுவதைத் தவிர்த்து, வேறுபாடுகளை ஒதுக்கி முடக்க முயற்சிகளை ஆதரிக்க அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் உபுல் ரோஹண அழைப்பு விடுத்தார். (ம)

## 13 பேருக்கு தொற்று

## புளியங்குளம் கல்மடு கிராமம் முடக்கப்பட்டது

(வவுனியா)

வவுனியா புளியங்குளம் கல்மடு கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்ரியன் பரிசோதனையில் 13 பேர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதையடுத்து குறித்த கிராமம் பொலிஸாரால் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது.

கல்மடு கிராமத்தில் சிலருக்கு காய்ச்சல் இருப்பதாக வவுனியா வடக்கு சுகாதார பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று எழுமாறாக அன்ரியன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. அதிலே கொரோனா தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து குறித்த கிராமம் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-299)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஐம்புலன்களின் இயல்பே ஞானம்

ஒருபுலன் இல்லாவிட்டால் மற்றப் புலன்கள் உயர்ந்திருப்பதைச் சிலரிடம் காண்கிறோம் என்று ஒருவர் கூறினார். ஒன்றை கூர்மை (மேன்மை) யாக்குவதற்கு நீங்கள் மற்றொன்றை இழக்க வேண்டியதில்லை. எல்லாவற்றையும் ஆழ்ந்த மௌனத்தின் மூலம் கூர்மையாக்கிக் கொள்ளலாம் என்று குருஜி கூறினார்.

உணர்வே இல்லையென்றால் என்ன நடக்கும்? என்று மிக்கி என்பவர் கேட்டதற்கு குருஜி பதிலளித்தார். நீங்கள் மிக்கி ஆகிவிடுவீர்கள் என்று (சிரிப்பால் அறையே வெடித்தது)

புத்தாண்டுப் பயிற்சி- ஒவ்வொரு அணுவிற்கும் பார்க்கும் மற்றும் கேட்கும் திறன் உண்டு என்பதை உணருங்கள். ஒவ்வொரு செல்லும் **(Cell)** கண்ணும் காதுமாகிவிடுகின்றன. நன்கு வசதியாக உட்கார்ந்து கொள்ளுங்கள்... கண்களை மூடிக்கொள்ளுங்கள்... நீங்களே கண்களாகவும் காதுகளாகவும் இருப்பதைக் கவனியுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

'ஹர' என்ற சொல்லுக்கு பாவங்களைப் போக்குவது என்று பொருள். 'ஹ' என்ற எழுத்து தமிழில் 'அ'என்று வரும். "ஹர ஓஹர" என்ற சொல் தமிழில் 'அரோகரா' என்று வந்தது.

சிவபெருமானுடைய திருநாமங்களில் 'அர' என்ற சொல் உயர்ந்தது. அரஹரா என்று இடையறாது உச்சரிப்பதால் நம் பாவங்கள் யாவும் தீயில் இட்ட பஞ்சு போல் எரிந்து ஒழியும். (தொடரும்)

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 17.08.2021-16.09.2021

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



விடாமுயற்சியால் வெற்றிக் கனியை எட்டிப் பிடிக்கும் மிதுன இராசி வாசகர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் புதன், சகாய ஸ்தானாதிபதி சூரியனோடு இணைந்து சகாய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவர் மீது குருவின் பார்வை பதிகின்றது. எனவே சென்ற மாதத்தைக் காட்டிலும் இந்த மாதம் சிறப்பாகவே அமையும்.

உங்கள் இராசிக்கு அஷ்டமத்தில் சனி பகவான் வக்கிர இயக்கத்தில் இருக் கிறார். இருப்பினும் பெரியளவில் பாதிப்புகள் ஏற்படாது. சிறு சிறு பிரச்சினைகள் வந்து கொண்டுதான் இருக்கும். தொழிலில் புதிய முய்ற்சிகளில் லாபம் கிடைக்கும்.

அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் முடியும் வரை, எதை யும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வதே நல்லது.

உங்கள் இராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. அவர் இப்பொழுது கும்ப இராசியில் வக்கிரம்பெற்று சஞ்சரிக்கிறார். இதனால் மணிவிழா, பவளவிழா போன்ற சுப காரியங்கள் இல்லத்தில் நடைபெற வழிபிறக்கும்.

வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து வேலைக் கான அழைப்பு வரலாம். புதிய பங்கு தாரர்களின் வருகையால், நின்றுபோன தொழில் மீண்டும் உயிர்பெறும்.

**உச்ச புதன் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 23 ஆம் திகதி, கன்னி இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு அதிபதியான புதன் உச்சம் பெறுவது சிறப்பானது. தொட்டது துலங்கும், தொழில் வளம் சிறக்கும். வீடு வாங்கும் யோகம் வாய்க்கும். வரவு திருப்தி தரும். செலவும் சுபச் செலவுகளாக மாறும். வாகனம் வாங்கும் முயற்சியும் கைகூடலாம்.

**சொந்த வீட்டில் சுக்கிரன்**

செப்டெம்பர் 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். அங்ஙனம் பலம் பெறும் சுக்கிரனின் மீது குருவின் பார்வை பதிகின்றது. எனவே விபரீத ராஜயோக அடிப்படையில், திட்டமிடாது செய்யும் காரி




யங்களில் கூட வெற்றி கிடைக் கும். திடீர் மாற்றங்கள் வரும். சுப விரயங்கள் அதிகரிக்கும்.

**கன்னி-செவ்வாய் சஞ்சாரம்**

செப்டெம்பர் 7 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் செவ்வாய். அவர் நான் காமிடத்தில் சஞ்சரிக்கும் போது, ஊதிய உயர்வு கிடைக்கலாம். ஒரு சிலருக்கு அரசு வேலை கைகூடும். வெளிநாட்டில் இருந்து அனுகூலமான தகவல் வந்து சேரலாம். தாமதமாகி வந்த பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

மாதத் தொடக் கத்தில் குரு, கும்ப இராசியில் வக்கிரம் பெற்று சஞ்சரிக் கிறார். அவர் செப்டெ ம்பர் 14 ஆம் திகதி மகர இரர்சிக்கு வரு கின்றார்.

அங்கு நீச்சம் பெற்று வக்கிர இயக் கத்திலும் இருக்கிறார். அவரது பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிகிறது. எனவே ஆரோக்கியம் சீராகும். வீடு வாங்கும் முயற்சி வெற்றிதரும். தாய் வழி ஆதரவு உண்டு. மங்கல ஓசை மனையில் கேட்கும்.இம்மாதம் அனுமன் வழிபாடு ஆனந்தம் வழாங்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

ஆரோக்கியம் சீராகி ஆனந்தப் படுத்தும். வெளிநாட்டில் இருந்து அனுகூலச் செய்தி வந்து சேரும். கணவன் - மனைவி உறவு பலப்படும். பிள்ளைகளின் கல்வி விருத்திக்காக எடுத்த முயற்சி வெற்றி பெறும். வருமானம் தேவைக்கேற்ப வந்து கொண்டேயிருக்கும். பணிபுரியும் பெண்களுக்கு எதிர் பார்த்த முன்னேற்றம் உண்டு. புதிய வேலைக்கு முயற்சித்தவர் களுக்கு அது கிடைக்கக்கூடிய சந்தர்ப்பமும் உருவாகும்.

## எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்து செய்வதே நல்லது



எதையும் சமாளிக்கும் மனப் பக்குவம் கொண்ட கடக இராசி வாசகர்களே!

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் சனி உங்கள் இராசிக்கு 7ஆம் இடத்தில் கண்டகச் சனியாக சஞ்சரிக்கிறார். அஷ்டம ஸ்தானத்தில் குரு இருக்கிறார். குருவின் பார்வை தன ஸ்தானத்தில் பதிவதால் பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும் மன நிம்மதி இருக்காது.

உங்கள் இராசிக்கு 7, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி. அவர் இப்பொழுது கண்டகச் சனியாக சஞ்சரித்தாலும், ஒரு சில காரியங்களில் நன்மைகளையும் அவர் செய்வார்.

குறிப்பாக வாழ்க்கை துணை வழியே ஏற்பட்ட பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். புதிய முயற்சிகள் ஒன்றிரண்டில் வெற்றி கிடைக்கும். சனிக்குரிய பிரத்தியேக வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

உங்கள் இராசிக்கு 6, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர், குரு பகவான். அவர் அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் பொழுது ஆரோக்கியத் தொல்லை ஏற்ப டும். உத்தியோகத்தில் திடீர் மாற்றங்களும், அதனால் மனச்சஞ்சலங்களும் உண்டாகும். பணிபுரியுமிடத்தில் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பொறுப்புகளை நீங்களே செய்வது நல்லது.

**உச்ச புதன் சஞ்சாரம்**

ஓகஸ்ட் 23 ஆம் திகதி, கன்னி இராசிக்கு புதன் செல்கிறார். அங்கு அவர் உச்சம் பெறுகிறார். உங்கள் இராசிக்கு 3, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் புதன். அவர் சகாய ஸ்தானத்தில் உச்சம் பெறுவது நன்மைதான். தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். பொருளாதார நிலை உயரும். வாகனம் வாங்கும் முயற்சி கைகூடும்.

**சொந்த வீட்டில் சுக்கிரன்**

செப்டெம்பர் 6 ஆம் திகதி, துலாம் இராசிக்கு சுக்கிரன் செல்கிறார். அது அவருக்கு சொந்த வீடாகும். அங்ஙனம் பலம் பெறும் சுக்கிரனின் மீது குருவின் பார்வையும் பதிகின்றது.

உங்கள் இராசிக்கு 4, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதி யானவர் சுக்கிரன். சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சுக்கிரன் மீது குருவின் பார்வை பதிவதால் சுகங்




களும், சந்தோஷங்களும் கிடைக்கும். துணிந்து சில முடிவுகளை எடுத்து மற்றவர் களை ஆச்சரியத்தில் ஆழ்த்துவீர்கள்.

**கன்னி-செவ்வாய் சஞ்சாரம்**

செப்டெம்பர் 7 ஆம் திகதி, கன்னி இராசிக்கு செவ்வாய் செல்கிறார். உங்கள் இராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாய், சகாய ஸ்தானத்திற்கு வரும்பொழுது இடம், பூமியால் எதிர்பார்த்த நற்பலன்கள் கிடைக்கும். புதிய தொழில் தொடங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். குறுக்கீடு சக்திகள் அகலும். குடும்பத்தில் சுப காரிய ங்கள் நிகழும்.

**குருவின் வக்கிர இயக்கம்**

மாதத் தொடக்கத்தில் குரு, கும்ப இராசியில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கிறார். அவர் செப்டம்பர் 14 ஆம் திகதி மகர இராசிக்கு வருகிறார். அங்கும் வக்ர இயக்கத்திலேயே இருக்கிறார். மகர ராசி குருவிற்கு நீச்சவீடாகும். கொடுக்கல் - வாங்கல் ஒழுங்காகும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். பொருளாதாரத்தில் நிறைவு ஏற்படும். மங்கல ஓசை மனையில் கேட்க வழி பிறக்கும். இம்மாதம் திங்கட்கிழமை தோறும் விநாயகப் பெருமானை வழிபட்டால் வெற்றி கிடைக்கும்.

**பெண்களுக்கான பலன்கள்**

உடன்பிறப்புகளின் உதவி கிடைத்து மகிழ்வீர்கள். விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்திணைவர். மாதத்தின் பிற்பகுதியில் பொருளாதார முன்னேற்றம் உண்டு. கணவன் - மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்லுங்கள். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சி னைகளை சமாளிப்பீர்கள். பணிபுரியும் பெண்களுக்கு எதிர்பார்த்த பலன் கிடை ப்பதில் தாமதம் ஏற்படும். சகப் பணியாளர்க ளால் தொல்லை அதிகரிக்கும். (தொடரும்...)

## பொருளாதாரத்தில் நிறைவு ஏற்பட்டாலும் மன நிம்மதி இருக்காது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பாண் விலை...

இதன்படி, பாணின் விலை 5 ரூபாயி னால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ள தோடு, ஒரு கிலோ கேக்கின் விலையை 100 ரூபாயினால் அதிகரிப்பதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஏனைய பேக்கரி பொருட் களின் விலை 10 ரூபாயினால் அதிகரிக்கப் படவுள்ளதாக சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயரட்ன தெரிவித்தார். (ம)

## வரணியில்...

கள் உடனடியாக மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுவந்த போதி லும் அவரது உயிர் ஏற்கெனவே பிரிந் திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாவளை இயற்றாலை வரணிப் பகுதி யைச் சேர்ந்த 26 வயதான யுவதி ஒரு வரே இவ்வாறு விபரீத முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

குறித்த யுவதி பல்கலைக்கழக படிப் பினை நிறைவு செய்தவர் எனத் தெரி விக்கப்படுகிறது. (ம-30)

## வடக்கில் 128...

கூடத்தில் நேற்று 740 பேருக்கு மேற் கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவற்றின் விபரம் வருமாறு.

யாழ்.மாவட்டத்தில் 68 பேர், கிளி நொச்சி மாவட்டத்தில் 32 பேர், முல்லைத் தீவு மாவட்டத்தில் 06 பேர், வவுனியா மாவட்டத்தில் 18 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)

## ஒரே நாளில்...

தினம் அமைந்துள்ளது.

குறித்த எண்ணிக்கையுடன் இலங் கையில் இதுவரையில் கொரோனாத் தொற்றினால் உயிரிழந்தோர் எண் ணிக்கை ஆறாயிரத்து 790 ஆக அதி கரித்துள்ளது.

மேலும் இலங்கையில் முதன்முறை யாக ஒரே நாளில் 3 ஆயிரத்து 806 கோவிட்-19 தொற்றாளர்கள் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் 2020 ஜனவரி தொடக்கம் நேற்று ஓகஸ்ட் 19ஆம் திகதி வரை 3 லட்சத்து 73 ஆயிரத்து 165 தொற்றாளர் கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம)

## கிளிநொச்சி...

ளிக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வரும் என்றும் மறு அறிவித்தல் வரை கிளிநொச்சி வர்த்தக நிலையங்கள் மூடப் படும் என்றும் வர்த்தக சங்கம் அறிவித் துள்ளது.

இதேவேளை கிளிநொச்சி சேவைச் சந்தையும் நேற்று முதல் கரைச்சி பிரதேச சபையினால் மூடப்பட்ட நிலையில் வர்த் தக நடவடிக்கைகள் பொது இடங்களில் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாகப் பின்பற்றப்பட்டு முன்னெடுக்கப்பட்டிருந் தன. (ம-100)

## வவுனியாவில்...

குறித்த பெண்ணுக்கு முன்னெடுக்கப் பட்ட பிசிஆர் பரிசோதனையில் கொரோனா தொற்று பீடித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட் டது. இதனையடுத்து அவர் பம்பைமடுவில் அமைந்துள்ள கொரோனா விடுதியில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று அவர் மரணமடைந்துள்ளார். (ம-299)

## நாட்டு மக்களு...

முடக்குமாறு மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்கள் ஜனாதிபதி மற்றும் பிரத மரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த நிலையிலேயே இன்றைய உரை யில் ஜனாதிபதி இதுகுறித்து விசேட அறி விப்பொன்றை விடுப்பார் என எதிர்பார்க் கப்படுகின்றது.

நாட்டில் நெருக்கடி நிலை தீவிர மடைந்துவரும் நிலையில் 2 வாரங்கள் பொது முடக்கத்தை அறிவிப்பதற்கு அர சாங்கம் தீர்மானித்துள்ளதாக அரச உயர் மட்டங்களை மேற்கோள்காட்டி கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இன்று நள்ளிரவு முதல் இரண்டு வாரங்களுக்கு பொது முடக்கத்தை அமுல் படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக் அறியமுடிகிறது.

சுகாதார பிரிவினரின் ஆலோசனை களுக்கு அமைவாக இன்று நள்ளிரவு முதல் நாட்டை முடக்குவதற்கு ஜனாதிபதி யால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும்,

பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்து தற்போது பரிசீலிக் கப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள் ளது. கொரோனா வைரஸ்பரவல்நிலைமை தொடர்பில் எடுக்கப்படவேண்டிய முக்கிய தீர்மானங்கள் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் சுகாதார அமைச்சர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளுடன் அவசர சந்திப்பொன்றும் இடம்பெறவுள்ளதாக தகவல்கள் வெளி யாகியுள்ளன. (ம)

# புதிய அரசியலமைப்பு தயாரிக்கும் செயற்பாடு தாமதிக்கக்கூடாது

## இரா.சம்பந்தன் ஜனாதிபதிக்கு கடிதம்

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பை தயாரிக்கும் செயற்பாடுகளை இனிமேலும் தாமதிக்கக் கூடாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அறிவித் துள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தி லேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஜூன் 16ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் பிரதமர் மற்றும் தமிழ் தேசி யக் கூட்டமைப்பு இடையில் பேச்சுவார்த்தை நடைபெறும் என அறிவிக்கப்பட்டு, பின்னர் அது ஒத்திவைக்கப்பட்டதாகவும் பிறி தொரு தினத்தில் அந்த சந்திப்பு இடம் பெறும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

சந்திப்பை நடத்துவதற்கான திகதி, மீள நிர்ணயிக்கப்படும் என அறிவித்து இரண்டு கடிதங்கள் அதன்பின்னர் தமக்கு கிடைத்ததாக இரா.சம்பந்தன் தெரிவித் துள்ளார்.

எனினும் அதற்கு பின்னர் எவ்வித தக வல்களும் கிடைக்கவில்லை எனவும் தாங்கள் விரும்புகின்றபோது சந்திப் பதற்கு தயாராகவுள்ளதாகவும் இரா.சம் பந்தன், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வுக்கு தெரிவித்துள்ளார். (ம)

## தற்போதைய...

பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர் னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"உலக நாடுகளைப் போன்று இலங் கையும் முகங்கொடுத்துள்ள கொரோனா வைரஸுக்கு எதிரான அரசின் வேலைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது தான் எதிர்க்கட்சியாக நாங்கள் இந்த நேரத் தில் செய்ய வேண்டிய பங்களிப்பாகும்.

எதிர்க்கட்சித் தலைவரும் இது தொடர் பில் பல விடயங்களைப் பேசி வருகின் றார். பாராளுமன்றத்தில் அரசின் பல குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி வருகின் றார்.

எனவே, இவ்வாறான நெருக்கடியான நிலையில் நாங்களும் பூரண ஒத்து ழைப்பு வழங்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவும் ஜனாதி பதியைச் சந்தித்து இதுதொடர்பில் பல விடயங்களைக் கலந்துரையாடியுள் ளார். எனவே, நாட் டில் உள்ள அனைத் துக் கட்சிகளும் இந் தக் கொரோனா வைக் கட்டுப்படுத்த, அதிலிருந்து எமது மக்களைப் பாது காக்க பங்களிப்புச் செய்ய வேண்டும்.

எமது பிள்ளை களைப் பாட சாலைக்கு அனுப்பு கின்ற நிலை மையை ஏற்படுத்த வேண்டும்.

மருத்துவமனை களில் உள்ள குறை பாடுகளை உடனடி யாகத் தீர்க்க வேண் டும் என்பதே அனை வரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

உண்மையில் இந்த வைரஸ் எவ் வளவு காலம் இலங் கையில் இருக்கும் என எம்மால் ஒன் றும் கூறமுடியாது.

எனவே, கட்சி பேதமின்றி இந்த வைரஸைக் கட்டுப் படுத்த அனைத்துத் தரப்பினரும் ஒன் றிணைந்து செயற் பட வேண்டும்" என் றார். (ம)

## கொரோனாத்...

பெற்றுவந்த மானிப்பாய் சுதுமலை வடக் கைச் சேர்ந்த 92 வயதுடைய ஆண் ஒரு வரும், கைதடியைச் சேர்ந்த 43 வயது டைய ஆண் ஒருவரும், மானிப்பாயைச் சேர்ந்த 85 வயதுடைய ஆண் ஒருவரும் உரும்பிராயைச் சேர்ந்த 86 வயதுடைய ஆண் ஒருவரும், அளவெட்டியைச் சேர்ந்த 68 வயதுடைய பெண் ஒருவருமே உயிரி ழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத் தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 192ஆக உயர் வடைந்துள்ளது. (ம-33)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 19/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1139
வெற்றி இலக்கங்கள்
தனுசு 3 2 4 9 8 3
தேசிய லொத்தர் சபை

### மெகா பவர்

திகதி 19/08/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0889
வெற்றி எழுத்து J சுப்பர் இலக்க 20
வெற்றி இலக்கங்கள் 08 10 51 64

### மஹஜன சம்பத

திகதி 2021/08/19
சீட்டிழுப்பு இலக்கம் 4541
ஆங்கில எழுத்து J
வெல்லப்பட்ட இலக்கங்கள் 2 5 0 1 0 5
தேசிய லொத்தர் சபை

### கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 19.08.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2836
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 38 45 51 72
தேசிய லொத்தர் சபை

### தன நிதானய

திகதி - 2021.08.19
சீட்டிழுப்பு இலக்கம் - 571
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 04 23 75 81
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

### அத கோடிபதி

சீட்டிழுப்பு இல: 1344
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 53,898,472
வெற்றி இலக்கங்கள் 09 38 44 59
ஆங்கில எழுத்து G
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### சனிதா

கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3679
சீட்டிழுப்பு திகதி: 19.08.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,011,009
வெற்றி இலக்கங்கள் 35 36 61 70
ஆங்கில எழுத்து W
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

### ராசி

சுப்பர் ஜக்பொட் 2,625,030.60/=
திகதி : 19.08.2021
வெற்றி வாரம் : 3230
வர்ணம் :
வெற்றி இலக்கங்கள் 12 20 30 33
சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 6,936,500/=

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1518
சீட்டிழுப்பு திகதி 19/08/2021
தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் P 32 41 58 72
அடுத்த சுப்பர் ஜக்பொட 64,135,898.80/=

### சங்வர்தன வாசனாவ

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 446
திகதி 19.08.2021
ஆங்கில எழுத்து Q
வெற்றி இலக்கங்கள் 28 50 60
விதி எண் 4
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 14,118,732
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 209 மருத்துவர்களுக்கும் 1,000 தாதியர்களுக்கும் கோவிட்

(கொழும்பு)

நாடளாவியரீதியில் 209 மருத்துவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொற்றுக்குள்ளான மருத்துவர்களில் 30 - 40 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன், ஒரு மருத்துவர் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்றும் குறித்த சங்கம் தெரிவித்துள்ளது.

இவர்களில் கொழும்பு தேசிய மருத்துவமனையைச் சேர்ந்த 27 மருத்துவர்களும், ஹோமாகம மருத்துவமனையைச் சேர்ந்த 17 மருத்துவர்களும் உள்ளடங்குகின்றனர்.

இதனிடையே, 3 மருத்துவர்கள் இதுவரை கொரோனா வைரஸால் உயிரிழந்துள்ளனர் என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் 1000 தாதியர்கள் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், அவர்களில் மூவர் உயிரிழந்துள்ளனர் எனவும் அகில இலங்கை தாதியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதுமாத்திரமின்றி, 37 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (ம)

# வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்கு வருவோருக்கு

## இன்று முதல் புதிய நடைமுறை

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து நாட்டுக்குள் நுழைவதற்கான தனிமைப்படுத்தல் விதிமுறைகளை இன்று முதல் அமுலுக்கு வரும் வகையில் திருத்தப்பட்டுள்ளன.

அதன்படி, வெளிநாட்டிலிருந்து நாட்டிற்கு வரும் ஒவ்வொரு நபரும் விமான நிலையத்தில் பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். பரிசோதனை முடிவுகள் கிடைக்கும்வரை தனிமைப்படுத்தலுக்கு தயார்படுத்தப்பட்ட ஹோட்டல் அல்லது இடமொன்றில் அவர்கள் தங்கியிருக்கவேண்டும்.

பிசிஆர் சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படாத நிலையில், முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொள்ளதவராக இருந்தால் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தல் கட்டாயமாகும். அத்துடன், புதிய வழிகாட்டுதல்களின்படி, பிசிஆர் சோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்படாத முழுமையாக தடுப்பூசி செலுத்திக்கொண்டுள்ள நபர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை.(ம)

# 20 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதி

## இன்று முதல் சதொசவினால் விநியோகம்

(கொழும்பு)

ஆயிரத்து 998 ரூபாய்க்கு 20 அத்தியாவசிய பொருட்கள் அடங்கிய நிவாரணப் பொதி இன்று முதல் நாடு முழுவதும் உள்ள சதொசவில் கிடைக்கும் என்று வர்த்தக அமைச்சர், கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

தனியார் துறையும் சதொச உடன் இணைந்து இந்த இணையவழி சேவையை செயல்படுத்தி பொருட்களை விநியோகிக்கும் என்று வர்த்தக அமைச்சர் கூறினார்.

முதல் இரண்டு வாரங்களில் நிவாரணப் பொதிக்கு போக்குவரத்து கட்டணம் வசூலிக்கப்படாது என்று கூறிய அமைச்சர், மக்கள் மீதான அழுத்தத்தைத் தவிர்த்து, இலாப நோக்கமின்றி இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

1998 சஹானா மல்லா' திட்டத்தின் தொடக்க விழா நேற்று வர்த்தக அமைச்சில் நடைபெற்றது. அதன் ஊடகவியலாளர் சந்திப்பில் வர்த்தக அமைச்சர், கலாநிதி பந்துல குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

இந்த நிவாரணப் பொதியில் 20 அத்தியாவசியப் பொருட்கள் உள்ளன. அவை வழக்கமாக சந்தையில் 2 ஆயிரத்து 600 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகின்றன.

அதன்படி, 20 பொருட்கள் அடங்கிய பொதியில் அத்தியாவசிய உணவுப் பொருட்களான 04 கிலோ அரிசி, ஒரு கிலோ மா, ஒரு கிலோ பருப்பு, ஒரு கிலோ வெள்ளை மற்றும் கறுப்பு சீனி மற்றும் ஒரு பாக்கட் தேயிலை ஆகியவையும் உள்ளடங்கியுள்ளதாக வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார். (ம)

## முல்லை – புதுக்குடியிருப்பில்

# வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு தீர்மானம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி, இன்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# வர்த்தக நிலையங்களை மூடுவதால் எவ்வித பயனும் கிடையாது

## இராணுவத் தளபதி சவேந்திர சில்வா



(கொழும்பு)

ஒரு சில பகுதிகளில் உள்ள வர்த்தகர்கள் சுயமாகவே வர்த்தக நிலையங்களை மூடியுள்ளனர். இதனால் நுகர்வோர் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வேறு பகுதிகளில் உள்ள நகரங்களுக்கு செல்கிறார்கள். ஆகவே வர்த்தக நிலையங்களை சுயமாக மூடுவதால் எவ்வித பயனும் கிடையாது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

தற்போதைய நிலையினை கருத்திற்கொண்டு வர்த்தகர்கள் தங்களின் வர்த்தக நிலையங்களை சுயமாக மூடியுள்ளமை வரவேற்கத்தக்கது. சாதாரண மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்படுவது அவசியமாகும்.

சிறு வியாபார நடவடிக்கைகளின் ஊடாக தங்களின் வாழ்வாதாரத்தை முன்னெடுத்து செல்லும் மக்கள் குறித்தும் சிந்தித்து செயற்பட வேண்டும்.

கோவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்த நாட்டு மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். புதிய சுகாதார பாதுகாப்பு வழிகாட்டலின் அடிப்படையில் பொதுமக்கள் செயற்பட வேண்டும்.

வீட்டிலிருந்து ஒருவர் மாத்திரம் வெளியில் செல்ல முடியும். எனினும் தொழில் மற்றும் அத்தியாவசிய சேவைக்காக வெளியில் செல்லும்போது ஒருவர் என்ற அறிவுறுத்தல் தாக்கம் செலுத்தாது என்றார். (ம).

# வவுனியாவில் 146 பேருக்கு கொரோனா

வவுனியாவில் மேலும் 146 பேருக்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர், வவுனியாவில் இனங்காணப்பட்ட தொற்றாளர்களுடன் தொடர்பைப் பேணியோர் மற்றும் எழுமாற்றுப் பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகின இதில் 146 தொற்றாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-250)


**PHYSICS Paper Class**

10th Aug. முதல் ஆரம்பமாகி நடைபெறுகிறது.
திங்கள் முதல் வெள்ளி வரை 8.00 pm - 9.15 pm
zoom

- 2011 - 2020 வினாக்களுடன் மொத்தப் பாடப் பரப்பையும் 3 மாதங்களில் முழுமையாக மீட்டல் செய்யப்படும்.

August - 2011 & 2012
September - 2013, 2014, 2015
- ஓர் நாளில் 4 Or 5 வினாக்கள் பூரண விளக்கத்துடன்...

October - 2016 முதல் 2020 வரையான துரித மீட்டல்

T.U. Jinthu - Science Ocean - Jaffna.
அனுமதிகள் 23 Aug. வரை வழங்கப்படும்.
☎-077 430 7829, 076 2...
(7695)

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
V2 TRAVELS
0777-068-777
(C-2569)

**Vacancy**

Sales girls, Sales man, Labor, Promotions (APP) girls, Marketing Executives.
077 773 3368
(7685)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதான நற்குணமுள்ள 2 இல் செவ்வாய் உள்ள உயர் வருமானம் பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.
075 883 0107
(7693)

**உடனடி வேலை வாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
சம்பளம் - 15'000/-
0777-068-777
(C-2570)

**விரைவு பொதிகள் சேவை**

V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
0768226240 DHL
(C-2438)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.